# தென்மொழி




## இதுதான் தமிழ்நாடு!
## இவன்தான் தமிழன்!

இதுதான் தமிழ்நாடு; இவன்தான் தமிழன்!
என்றென் றைக்கும் இவன் மாறான்!
எறும்புமுன் னேறி யானையை வீழ்த்தும்;
ஏணிவைத் தேற்றினும் இவன் ஏறான்!
வெதுவெதுப் பாக—நாக்கடிப் பாக—
வெற்றுரை ஆர்ப்பான்; வினை காணான்!
வீணரைப் புரப்பான்; கால்களில் வீழ்வான்;
வெறுங்கை வீசுவான்; பழி நாணான்!

எண்ணிக் கொள்ளுங்கள்; இவன்தான் தமிழன்!
எவர்உணர்ந் தாலும் இவன் உணரான்!
எத்தனை நூறோ டாயிரம் ஆண்டுகள்
ஏகினும் விரற்கடை இவன் வளரான்!
பண்ணிக் கொள்ளுங்கள், மனத்தினில் உறுதி!
பல்லிளிப் புக்கும் வழி நிற்பான்!
பாசம் பிடித்து மொழுக்கெனத் தேய்ந்தலர்
பழங்கா சுக்கும் தனை விற்பான்!

எழுதிக் கொள்ளுங்கள்; இவன்தான் தமிழன்!
எந்தநாட் டிலுமே இவன் கிடப்பான்!
எச்சில்உண் டிக்கும் கழிகந் தலுக்கும்
எவன்பின் னாலும் இவன் நடப்பான்!
புழுதியிற் கிடப்பான், புன்மைகள் நினையான்;
பொய்மைக்கும் போலிக்கும் விலை தருவான்!
புதுமைகள் பூக்கும்; புரட்சிகள் மலரும்;
புதுவாழ் வமைத்திட இவன் விரும்பான்!


சுவடி: 14.
ஓலை: 1.
விலை: உரு: 1.

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

# நமக்கு வந்த மடல்கள்.

**0 : 513:** அன்பரீர்! தமிழ் மருத்துவரான தாங்கள் வெஞ் சிறையிலிருந்து விடுதலையாகப்போகும் செய்தியை 10-1-1977-இல் பம்பாய் மாநகர் கார்ச்சாலை, தொடர்வண்டி நிலையவடியில் அறிந்து அகம் மகிழ்ந்த யாம் "தினமணி" நாளிதழில் இன்று நீங்கள் விடுதலையான செய்தி கண்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

—க. பன்னீர்ச்செல்வம், பம்பாய்-17.

**0 : 514 :** நல்லாண்மை மிக்க பாவலர் அவர்களே! வணக்கம். யானைக் கூட்டங்களுக்கிடையே தன்னந்தனியாக அரிமாப்போல் முழங்கி நிற்கும் தங்களுக்கு அடியேன் முழு அளவில் ஒத்துழைக்க இயலாதவனாக இருந்தாலும் ஓர் அணுவளவாவது உதவவேண்டும் என்ற உணர்வின் உந்துதலால் இத்திட்டம் வகுத்தேன். மாதம் தோறும் உருபா 10 தங்களுக்கு விடுப்பேன். தங்களுக்கு விருப்ப மானால் அதன் மதிப்புள்ள தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ் களை எனக்கு விடுக்கலாம். அப்படி விடுத்தால் தமிழார்வம் படைத்த ஏழை எளிய மாணவர்களுக்கு அவற்றை இலவசமாக வழங்கு வேன்; பலரையும் படிக்கச்செய்வேன்.

காலப்போக்கில். இத்திட்டம் தொடர்ந்து நடத்துகொண்டிருக் கவே, உறுப்பினர் சேர்க்கும் முயற்சியிலும் ஈடுபடுவேன்.

—ச. தமிழ்வேலன், மன்னார்குடி.

**0 : 515 ;** பேரன்புமிக்க ஐயா, உங்களின் இரு கால்களையும் தொட்டு வணங்கி எழுதுகின்றேன். உங்களின் சிறைச்செய்தி ஆற்றொண்ணாத் துயரத்தை உருவாக்கிவிட்டது. அதன் அதிர்ச்சியி னின்று நானும் என்னைச் சார்ந்த உணர்வுள்ளங்களும் விடுபட வில்லை. எனக்குத் துன்பம் துணையாக நிற்கின்றது. என்னைப் பொறுத்தமட்டில் துன்பம் மிகுதியாக இருந்தாலும் தென்மொழித் தொடர்பையும் தொண்டையும் விட்டு இருக்க முடியாது.

நீங்கள் சிறையிலிருந்தபோது அதிகாரிகள்-நம்மவர்கள் (இப் படிச்சொல்லவே வெட்கப்படுகின்றேன்)உங்களை எப்படி நடத்தினார் -கள்?........இந்தத் தமிழ்க் குமுகாயம் உங்களை எப்போதும் புறக் கணித்தே வருகின்றது அவர்களின் அறிவுணர்வைப் பூட்டிட்டே வந்திருக்கின்றது. உங்களின் அறிவு வேளாண்மைப் பயிர் இந்த தமிழ் மக்களை என்று நன்னெறியில் உயர்த்துமோ? என்றுதான் உங்களின் அறிவெழுச்சியை இந்த உலகு—குறிப்பாகத் தமிழ் உலகு ஏற்றுக்கொள்ளுமோ?—தெரியவில்லை.

மொத்தத்தில் நாம் செல்லுவதில்—போக்கில் பிழையிருக்குமோ என ஐயம் எழுகின்றது. தமிழகத்தில்—தமிழறிஞர்களும் நன்கு பயின்ற சிலரும் முகாமையான அரசியலரும் உங்களைத் தெரியாமல் இருக்கமுடியாது. ஆனால் உங்களின் பெயரையும் அறிவையும் திறனையும் சிந்தனையாளர். பயிலும் மாணவர், ஆசிரியர் உட்பட பல பொது மக்களிடையே உங்களை அறிமுகம் செய்வித்தல்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கப் பார்க்க)

"கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!




சுவடி : 14 ஓலை : 1

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

# தென்மொழி

இலக்கிய இதழ்

மீனம்–தி. பி. ௨00௮–ஏப்பிரல்–1977.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்.

ஆசிரியர் : பூங்குன்றன். அறி.இ. (க.மு.)

தென்மொழி மின் அச்சகம், சென்னை–5. தமிழகம்.

[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும், பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.]


# அரசியல் சூறாவளிகள்!



ஆங்கிலப் புலவர் கோல்டு சுமித்து (Oliver Gold smith) தம் 'உலகச் சிறப்பியல்களின் நிலையாமை' (On the instability of world grandeur) என்னும் சிறப்புக் கட்டுரையில் கீழ்வருமாறு எழுதுகிறார், "இன்றைக்கு இலக்கக்கணக்கான மக்களின் புகழ்ச்சி ஆரவாரத்தால் மிகக்கனத்துப்பெரிதாக மயங்கி மகிழும் ஒருவரின் தலை, அடுத்தநாளே வெட்டப்பட்டு ஒரு கம்பத்தில் மாட்டிவைக்கப்படலாம்' என்பது வரலாறு நமக்கு அடுத்தடுத்துக் கற்பிக்கும் ஒரு பாடம்" (History has frequently taught, that the head which has grown this day giddy with roar of the million has the very next been fixed upon a pole,) நெடுந்தொலைவு அரசியல் வரலாறுகளை நினைவு கூராமல், சென்ற சிலவாண்டுகளின் எல்லைக்குள் வாழ்ந்த யாகியாகான், முசுபிர் இரகுமான் இருவர் நிலைகளையும் எண்ணிக் கொண்டாலே, இக்கூற்று, எத்துணை உண்மையானது— இயற்கையானது என்று புலப்படும். அதே கட்டுரையில் பிறிதோர்

இடத்தில் பொதுமக்களின் ஆரவாரப்புகழ் விலைமகள் ஒருத்தியின் பாராட்டுதல் போன்றது என்றும், உண்மையான புகழ் குலமகள் ஒருத்தியின் நிலைமாறுத அன்பைப் போன்றது என்றும், அப் புலவர் கூறுவார். இனி, இவரினும் அனைத்து நிலையாமை நிலைகளையும் நம் தமிழ் இலக்கியச் செழும் புலவர்கள் அன்றே எடுத்துரைத்த வகையும் வலிமையும் மிகமிக விரிவும் விளக்கமும் வாய்ந்தவை. வடமொழிப் பொருள் நூல் (அர்தத சாத்திரம்) ஆசிரியனும், மிகக் கைதேர்ந்த அர சியல் விரகனும் ஆகிய சாணக்கியன் என்னும் கௌடிலியனும் கூட, "உன் தலைக்குமேல் மயிரிழையால் கட்டப்பெற்ற கூரிய கத்தி ஒன்று எப்பொழுதும் தொங்கிக் கொண்டுள்ளது என்று நினைத்துக்கொள்" என்று அரசனை எச்சரிக்கை செய்கின்றான். ஆனால் மிக இளமைப் பருவத்திலேயே உலக வரலாற்றை தம் தந்தை வாயிலாக ஒருவாறு கற்ற திருவாட்டி. இந்திரா காந்தியம்மையார், அரசியல் சிறு தலை வர்களும் கற்கவேண்டிய தொடக்க நிலைப் பாடமாகிய இவ் வுண்மையை அறியாமற் போனது வியப்பினும் வியப்பே!

சென்ற ஆண்டு இதே பொழுதில், இதுபோல் எந்த ஒரு கருத்தினை யும் கூறுதற்கு வாய்ப்பில்லாமல் இவ்விதழாசிரியனை யுள்ளிட்ட ஏறத்தாழ ஒன்றரை இலக்கம் அரசியல் தொண்டர்களும், தலைவர் களும் இந்திராகாந்தியின் பூதப்பிடியில் சிக்கியிருந்து,வெளியேவிடப் படுவோமா என்று ஐயுற்று அலமருண்டுக் கொண்டிருந்த ஒருநிலைக்கு இன்றுள்ள நிலை, ஒரு கரிச் சுரங்கத்தின் புகை மூட்டத்திற்கும் இடி பாடுகளுக்கும் இடையில் சிக்கியிருந்த பல்லாயிரக்கணக்கான உயிர் களை, ஏதோ, அவற்றின்மேல் கழிவிரக்கம் கொண்ட தெய்வ மகன் ஒருவன் தூக்கி, வெட்டவெளியில் கொண்டுவந்து நிறுத்தியதைப் போன்றது. இனி, அரசியல் தொடர்புள்ளவர்கள் அல்லாத பொது மக்களில் மிகப் பெரும்பாலோர் கூட அந்த அம்மையாரின் கொடுங் கோல் ஆட்சியின் கடுமையால் தாக்குண்டு கருகி மனம் வெதும்பிக் கசிந்து போயிருந்தார்கள் என்பது மிகையான கூற்றாக இருக்க முடியாது. தனிப்பட்ட ஒருவரின் ஆணவ அதிகாரத்தால் நாட்டு மக்க ளுக்குத்தான் எவ்வளவு இழப்புகள்! கேடுகள்! துன்பங்கள்! உரி மைப் பறிப்புகள்! அரசியல் கட்சிகளுக் கிடையில்தாம் எத்தனைப் பழிவாங்கல்கள்!

இனி, இந்திரா காந்தியின் பெயரைச் சொல்லிக் கொண்டு, அவர் சார்பான அமைச்சர்களும், கட்சித் தலைவர்களும், தமிழ்நாடு போலும் ஓரிரு மாநிலங்களின் ஆளுநர்களும் அவர்தம் பரிவாரங் களும் நடத்திய அதிகாரச் சூதாட்டங்களோ கொஞ்சநஞ்சமல்ல. ஒரு புறத்தில் மக்களின் அறியாமை, மூடநம்பிக்கை நிரம்பிய அஞ்சி

நடுங்குகின்ற நிலை; மறுபுறத்தில் அரசியல் சூதாடிகளின் வல்லதிகார ஆணவ வேட்டைகள்! மொத்தத்தில் இந்திய நாடே கடந்த பத்தொன்பது மாத நெருக்கடி ஆட்சிக் காலத்தில் ஓர் அரசியல் கொள்ளைக் காடாகவே காட்சியளித்தது என்று சொன்னால் அதில் தவறே இருக்கமுடியாது.

பொதுமக்களின் வாழ்வியல் நிலைகள் இவ்வாறிருக்க, இந்தியாவின் பொருளியல் நிலைக்குத் தான் எத்தனைச் சரிவுகள்! தாயினது இருபது கொள்கைத் திட்டமென்றும், மகனது ஐந்து கொள்கைத் திட்டமென்றும், அவற்றின் சாக்கில் அந்த அம்மையார் நினைக்காதவற்றையெல்லாம் செயல்படுத்தி விடவேண்டும் என்னும் துடி துடிப்பில் அவரின் பூசாரி அமைச்சர்களும் புகழ்பாடுந் தலைவர்களும் செய்த தாறுமாறான அதிகார வீசல்களுக்கு அளவேயில்லை. எத்தனை எத்தனை விளம்பரங்கள்! வண்ண வெளியீடுகள்! எத்தனை வகையான வானொலிக் கூத்தடிப்புகள்! பேச்சு அறுவைகள்! நாடக ஆர்ப்பாட்டங்கள்! அடடடா! வானொலியையே முற்றதிகாரக் குத்தகையாக எடுத்துக் கொண்டவர்களும், அவர்களைச் சார்ந்த குடும்பங்களும் குஞ்சு குளுவான்களும் 'இருபது அம்சம்" என்றும் 'ஐந்து அம்சம்' என்றும், போட்ட ஆர்ப்பாட்டங்கள் தாம் என்னென்ன! குடும்பக் கட்டுப்பாட்டுக் கொள்கைகள் என்னும் கொடுமைகளை அவர்கள் வண்ணித்துப் பேசிய வகைகள்தாம் எத்தனை! அவற்றிற்காக இந்நாட்டு மக்கள் கொட்டியழுத வரிப்பணங்கள்தாம் எத்துணையளவு பாழாயின! இந்தியா போலும் ஏழை நாடுகளுக்கு இவ்வார்ப்பாட்ட நிலைகள், தற்கொலை முயற்சிகளே தவிர, கண்டிப்பாக சமநிலைக் கோட்பாட்டுக்கும் நிகரமைக் கொள்கைக்கும் கொண்டு செலுத்தப்படும் முன்னேற்றப் படிகளாக இருக்கவே முடியாது. மக்களில் தங்களுக்குப் பிடிக்காத ஒரு பகுதியினரைத் தகர்த்து விட்டுத்தான் சமநிலைக் கொள்கையையும், இருபது கொள்கைத் திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டும் என்பதில் தெளிவான அரசியல் நோக்கு இருக்க முடியாது. அதிகாரத்தை அதிகாரிகளின் முழு விருப்பத்திற்குச் செயல்பட விட்டுவிட்டால், கொள்கை நிறைவேற்றப் படாது; கொடுமைதான் நிறைவேற்றப்படும் என்பதை அரசியலதிகாரப் பதவி ஊர்திகளில் அமர்ந்து உலா வருவோர்—இந்திரா காந்தியின் முற்றதிகார ஊழிக்குப் பின்பேனும்—உணர்ந்துகொள்ளுதல் வேண்டும்.

விடுதலை வாங்கித் தந்த பேராயக் கட்சியின் பெருந் தலைவர்களையெல்லாம் ஈவு இரக்கமின்றிச் சிறைக்குள்ளே வைத்து விட்டு, "விடுதலை வாங்கிய அந்தப் பேராயக் கட்சியினர், நாங்கள்தாம்"

என்று வெட்கமும் அறிவுமின்றி, வெளியே பொது மக்களிடம் வீதியுலாப் பாடிவந்த நிலையை, கோட்சேவால் கொல்லப்படாமல் இன்றுவரை உயிருடனிருந்து காந்தியடிகள் கண்டிருப்பாரானால், உடனே அவன் கைத் துமுக்கியைத் தாமே பறித்து வாங்கித் தம் நெஞ்சில் தாமே சுட்டுக்கொண்டு இறந்திருப்பார். மெய்ம்மையே வாழ்வாக வாழ்ந்து காட்டிய அவர் வாழ்ந்த நாட்டில், கடந்த ஒன்றரையாண்டுக்காலமாக பொய்ம்மையே கொடிகட்டிப் பறந்தது; போலிகளே உலா வந்து கொண்டிருந்தன; கொடுமைகளே தாண்டவம் ஆடின; கூற்றுவனின் தூதுவர்களே ஆட்சிக் கட்டிலில் அமர்த்திருந்தனர்.

இறுதியில், 1975-சூன் 25-ஆம் பக்கல் அறிவிக்கப்பெற்ற நெருக்கடி நிலையைத் தொடர்ந்து நடைபெற்று வந்த அதிகாரத் தவறுகள், அளவுக்கு மீறிய அடக்குமுறைகள், அரசுக் கவிழ்ப்புகள், கையூட்டுக் கொள்ளைகள் ஆகியவற்றுக்கெல்லாம் மிகமிக அமைதியானமுறையில் பொதுத்தேர்தல் என்னும் குடியரசமைப்பின் வலிந்த கருவியால் ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பெற்றது. முடிவாக, மக்களை அதிகாரக்கொம்புகளால் துரத்தித் துரத்தி முட்டிக் காயப்படுத்திய மாடும் கன்றுமே ஆட்சிக் களத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டன. நாடு ஒரு குடும்பத்தின் வல்லாண்மைப் பிடியினின்று மீண்டு, மக்களின் கைக்கு மாறியது, அல்லது ஒரு கட்சியின் முற்றாளுமையினின்று பல கட்சித் தலைவர்களின் ஒருங்கிணைந்த நல்லாளுமையின்கீழ் வந்தது. மொத்தத்தில் முப்பதாண்டுகளுக்கு முன் புறவிடுதலை பெற்ற இந்தியா இப்பொழுதுதான் அகவிடுதலை பெற்று விளங்குகின்றது என்றே சொல்லலாம். எனினும் புதிய அரசு இந்திரா அரசின் பல சிதைவுகளைத் திறமையுடன் எதிர்கொண்டு திருத்தவேண்டி யிருக்கும்! காலப்போக்கில்தான் அதன் முடிவுகள் நன்கு புலப்படும், அதனைப் பிறகு பார்க்கலாம்.

ஆனால், இந்த அரசியல் சாணக்கியச் சூழ்ச்சிச் சூறுவளியில், தமிழகமும் தமிழக மக்களும் கடந்த ஒன்றரையாண்டுகளாகப் பட்ட தொல்லைகளும் துயர மூட்டங்களும் இன்னும் முழுவதுமாக விலகிவிடவில்லை. சட்டிக்குத் தப்பி நெருப்பில் வீழ்ந்ததுபோல், இந்திராவின் அரசியல் பிடியினின்று மீண்டு, இன்று ஒரு திரைப்படக் கவர்ச்சிக்கு நாம் ஆட்பட்டுவிட்டோம். இது தமிழக மக்கள் இன்னும் அரசியல் அகரவரிசையைக் கூடச்சரியாகக் கற்றுக்கொள்ளவில்லை என்பதையே காட்டுவதாகக் கொள்ளலாம்.

இனி, தமிழகத்தைப் பொறுத்தவரையில், இங்குக் கடந்த ஒன்பதாண்டுக் காலமாக அரசு வீற்றிருந்த தி. மு. கழகம், தன்

சார்பில் ஒரே ஒரு பாராளுமன்ற உருப்பினரையே தில்லிக்குப் படி நிகராளியாக அனுப்பிவைக்க முடிந்த கதை மிகவும் இரங்கத்தக்கது! தி. மு. க.-வின் மேலுள்ள வெறுப்புகளாலேயே மக்கள் அக்கழக உறுப்பினர்களைப் புறக்கணித்தனர் என்று சொல்வதில் முழுவதும் உண்மையில்லை யாஞலும், அவர்கள் மேல் மக்களுக்கு வெறுப்பே இல்லை என்றும் கூறிக்கொள்ள முடியாது. 'செய்தக்க அல்ல செய்க கெடும்; செய்தக்க செய்யாமையானும் கெடும்'—என்னும் குறளைப் படித்தவர்கள் அவர்கள். எனவே, ஏற்பட்ட இழிவுக்கு மக்களையே குறைகூறித் தங்கள் நிலைக்கு நயன்மை கற்பித்துக் கொள்ளமுடியாது. அவர்கள் தங்கள் ஆட்சியில் செய்த தவறுகள், இந்திராவின் தவறுகளைப்போல் அவ்வளவு பெரியன அல்லவாயினும், அவர்கள் செய்த தவறுகள் தவறுகள்தாம்! இன்றைய ஆட்சி நிலையில் எந்த ஓர் அரசியல் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இத்தகைய தவறுகளை எவ்வகையிலேனும் ஒருவாறு செய்யத்தான் செய்யும் என்று தி. மு. க. சார்பில் சாக்குச் சொல்லலாம். அதனால் தவறுகள் பொதுவானவை என்று ஆகிவிடா. மக்களுக்கு வெளிப்படையாகத்தெரிந்த உண்மைகளை அவர்கள் என்ன பேசியும் மறைக்கமுடியாது. ஆனல் அவர்கள் இன்னும் தங்கள் தவறுகளை உணர்ந்ததாகத் தெரியவில்லை. இன்னும் தாங்கள் செய்தனவெல்லாம் சரியானவையே என்று அவர்கள் கருதுவதாகத் தெரிகிறது. அத்தகைய ஒரு நிலை அவர்களுக்கு மேலும் மேலும் சரிவுகளையே உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை.

தி. மு. க.-வின் ஆட்சிச் சரிவுக்கு, ஏறத்தாழ ஒன்றரையாண்டுகளுக்கு முன்பே தென்மொழி 'தி. மு. க. அமைச்சர்களுக்கு ஓர் எச்சரிக்கை' என்னுந் தலைப்பில், அவர்களுக்கு வீழ்ச்சி ஏற்படும் என்பதையும், அதற்குரிய கரணியங்களையும் சுட்டிக்காட்டி தெள்ளத் தெளிவாக ஓர் ஆசிரியவுரை எழுதியிருந்தது. அதன் கணிப்பு வெறும் மனக்கசப்பின் விளைவாக எழுந்தது என்று அக்கால் அவர்களில் சிலரால் கூறப்பெற்றது. ஆனல் அதன் உண்மையை அவர்களின் ஆட்சிச் சரிவுக்குப்பின் உணர்ந்திருப்பார்கள் என்று நம்பினேம். ஆயின், அவர்களுக்கு இயல்பாகவே உள்ள தன்முனைப்பின் முடிவை அவர்கள் இக்கால் முழுவதுமாகவே நுகர வேண்டி வந்துவிட்டது.

எனினும் வீழ்ந்து விட்டவர்கள் மேல் கல்லெறிவது நமக்குரிய தமிழ்ப் பண்பு ஆகாது. அவர்கள் வீழ்ந்து விடவில்லை; வீழ்த்தப் பட்டு விட்டார்கள் என்றாலும் ஒருவகையில் சரிதான். அதற்காகத் தங்களுக்கு முற்றிலும் எதிராகவும், சூழ்நிலைக்குத் தக்கவாறு தம்மை நெளிவித்தும் குனிவித்தும் தம் கட்சியை நடத்திக்கொண்டு போகும் ஒரு திரைப்பட நடிகரிடந்தான் தங்கள் வீழ்ச்சியின் வித்து இருப்பதாகக் கருதிக்கொண்டு, மன எரிச்சலும் வினைச்சோர்வும் கொள்வது, அவர்களின் கொள்கை மெலிவையே காட்டுவதாகும். தங்கள் வீழ்ச்சிக்குத் தாங்களே அல்லது தங்களைச் சார்ந்தவர்களே—தாம் முழுப் பொறுப்பாளர்கள் என்று நினைக்கும் தன்னுணர்வு நிலை அவர்களிடம் இன்னும் வளர்ந்தாகல்வேண்டும்.

தமிழகத்தில் வளர்ந்துள்ள பொய்ம்மையும் போலியும் கலந்த ஒருவகையான அரசியலுணர்வுக்கு தி. மு. க.-வினரே முதன்முதல் பொறுப்பேற்க வேண்டியவர்கள் என்னும் நடுநிலை உண்மையை அவர்கள் மறந்துவிடக் கூடாது. இவர்களை முடுக்கமாக எதிர்த்து நிற்கின்றவரும், இவர்களின் உள்முகக் கூறுகளையும் வலிவு மெலிவு களையும் நன்குணர்ந்தவரும் ஆகிய நடிகர் திரு. இராமச்சந்திரனின் முழு வளர்ச்சியும் இவர்களை அடியொட்டியதே ஆகும்! இவர்கள் வளர்த்த போலி அரசியல் உணர்வுகளின் முழு விளைவே, இவர்களை இத் தேர்தலில் முறியடித்தது என்று சொன்னால் அது மிகையே அன்று. இன்னுஞ்சொன்னால் இவர்களைவிட இன்னுந் திறமையாக இவர்களின் அரசியல் கலையை திரு. இராமச்சந்திரன் அவர்கள் பயன்படுத்திக் கொண்டதாகச் சொல்வதில் பிழையில்லை. திரைப் படத்தில் அவர் கையாளும் கலை நுட்பங்களே அரசியல் விரகுகளாக அவரிடம் மலர்ந்துள்ளன. இதில் அவரைக் குறைகூற ஒன்றுமே இல்லை. தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும் என்பது மரபு வழி மெய்யானது. இது தவிர, இதில் வேறு விளங்காத உண்மை என்பது எதுவுமே இல்லை.

இவ்வகையில் தி. மு. கழகம் எவ்வளவுதான் தவறு செய்திருந்தாலும் அதைத்தவிர தமிழினத்திற்கு, இற்றை நிலையில், காவலாக நிற்கின்ற இயக்கம் வேறு ஒன்று மில்லை என்பதை வெளிப்படையாகச் சொல்வதில் தயக் கமே தேவையில்லை. பழைய பேராயக்கட்சி இந்திய தேசிய மரபு கொண்டது. தமிழினத்தின் உள்முக வெளி

முகத் தாக்குதல்களை அதனால் ஒருபோதும் உணரவும் முடியாது; ஒப்புக்கொள்ளவும் முடியாது. மேலும் தமிழ் மொழியின் தூய்மை யுண்மையையும் தாய்மை வரலாற்றையும் இன்று வரை அக்கட்சி விளங்கிக் கொண்டதாகவே தெரியவில்லை. மாறாக இந்தி மொழிக்கு வேறு அக்கட்சி கட்டியங்கூறி நிற்கிறது. எனவே, தமிழின மரபு தழுவிய தி மு. கழகத்தைத்தவிர அம்மரபு தழுவாத வேறு எந்தக் கட்சியையும் தமிழர்கள் நம்ப முடியாது. இக்கால் அ. இ. அ. தி. மு. க.-வைத் தமிழர்கள் நம்பியதும் அதன் அடிப்படையில்தான். இந்திரா பேராயத்திற்கு வரவேற்பளித்ததும் (அக்கட்சியின் கணிப்புப்படியே) நடிகர் திரு. இராமச்சந்திரனின் கடைக்கண் பார்வையால்தான்! தி. மு. க., அ, இ. அ. தி. மு. க. இரண்டு கட்சிகளின் பேலும் மக்களுக்கு நம்பிக்கையிருந்தாலும், நடிகர் கட்சியின் வலிவுக்குக் கரணியம் அவரின் திரைப்படக்கவர்ச்சியும் அதில் கலந்து இருக்கிறது என்பதும், ஓரளவு உண்மைதான். ஆனால் இதே திரைப்படக் கவர்ச்சியைத்தான் அன்று மக்களிடம் காட்டி ஒப்போலை பெறலாம் என்று தி மு.க.-வும் எண்ணிச் செயல் பட்டு, ஓரளவும் வெற்றியும் பெற்றது என்பதை இப்பொழுது மறந்துவிடவும் முடியாது; மறுத்துவிடவும் முடியாது. இது மக்கள் குறையன்று; தி.மு.க.-வின் குறையே. மேலும் கடந்த ஒன்பதாண்டுக் கால ஆட்சியில் கூட அவர்கள் இந்நாட்டு மக்களுக்கு எவ்வகை அரசியலறிவையும் ஊட்ட முயற்சி செய்யவில்லை. ஒரு போலித்தனமும் பொய்ம்மையும் கலந்த அரசியல் பேச்சுகளின் வளர்ச்சியையே அரசியல் வளர்ச்சி என்று கருதிவிட முடியாது. அரசியல் என்பது ஏதோ தங்களுக்கு மட்டுமே கைவந்த கலை என்று நினைத்துப் பேசி விடக்கூடாது. அறவியலும், உண்மையும், நேர்மையும், ஒழுக்கமுமே அரசியல் என்பது இவர்கள் கற்றுக்கொள்ள மறந்த பாடம். அந்த அரசியல் மலர்ச்சியை நோக்கித்தான் நாடு இப்பொழுது போய்க்கொண்டிருக்கின்றது. வடக்கே இந்திராவும் தெற்கே தி.மு.க.-வும் தேர்ந்தெடுக்கப்படாமல் போனதற்கு, இந்த மறுமலர்ச்சி நோக்கிய எண்ண வளர்ச்சியே கரணியம்.

அதிகாரமோ, பதவியோ, மக்களை ஏமாற்றும் கலையோ அரசியலன்று. உண்மையான தொண்டு, நேர்மையான ஆளுமை, மக்களை

நினைவு கூர்கின்ற செயல்கள், தந்நலமற்ற ஈகம்—இவற்றை எதிர்பார்த்தே இந்திய மக்களும், குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்களும் அரசியலை மதிக்க விரும்புகின்றனர். இதில் வடநாட்டு மக்கள் ஏறத்தாழ சரியான பாதையைத் தேர்ந்தெடுத்து விட்டனர். தமிழக மக்களுக்கோ அத்தகைய பாதை—அதுவும் தங்கள் இன மரபு, மொழி மரபைக் கட்டிக்காக்க விழைகின்ற எண்ணத்தோடு கூடிய பாதை—ஒன்று வேண்டும். அந்தத் தேர்ச்சியில்—அந்த விழைவில் தங்களுக்குத் தெளிவாகத் தெரிந்த ஒன்றை—ஒருசில நிலைகளுக்காகக் கைவிட்டுவிட்டு, தெளிவுறாத ஒன்றை—ஏதோ ஒரு நம்பிக்கையின் அடிப்படையில் கைப்பற்றி யிருக்கின்றனர். இந்நிலை முழுக்க முழுக்கத் தவறு என்றும் தள்ளிவிட முடியாது. அல்லது முழுக்க முழுக்கச் சரியென்றும் கொண்டுவிட முடியாது. தமிழக மக்கள் தங்கள் சரியான பாதையைத் தேர்ந்தெடுப்பதில் எத்தனை முறை வேண்டுமானாலும் தவறலாம்; அல்லது ஏமாறலாம்; ஆனால் அவர்களை ஒருமுறைகூட ஏமாற்றாத தலைவர்களையே அவர்கள் விரும்புகின்றனர். இந்த உண்மையை மக்கள் மனவியல்படி விளங்கிக் கொள்ளாத நிலையில், அவர்களுக்கு அறிவில்லை என்றும், கவர்ச்சியில் மயங்கி விட்டனர் என்றும், போலியரசியல் உண்மைகளையும் பொருளியல் வலிவுகளையும் வைத்துப் பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை. தி.மு.க.-வினர் தங்களைத் திருத்திக்கொண்டு மக்கள் முன் வரவேண்டும் என்பதே நம் கோரிக்கை!

அறத்தையும் உண்மையான அறிவையும் நடுநிலைக் கருத்துகளையும் மதிக்காத எவராயினும் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்து, உண்மையான புகழ்பெற்றதாக வரலாறில்லை. இல்லை, அடிபிடியும், ஆரவாரங்களும், விளம்பரங்களும், பண முதலீடுகளுந்தாம் அரசியல் என்றால், இன்னும் மூவாயிரமாண்டுகள் போனாலும் தமிழின வரலாற்றை எவரும் மாற்றி எழுதிவிட முடியாது என்பதை அனைவரும் தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டுகிறோம். இதுவே கடந்த ஒன்றரையாண்டுகளாக இந்தியாவிலும் குறிப்பாகத் தமிழகத்திலும் வீசிய அரசியல் சூறாவளிக்குப்பின் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம்!



# என் வாழ்வும் தமிழும் ஒன்றன்றோ ?

உண்மைக் கென்றும் அழிவில்லை—என்
உயிர்மைக் கென்றும் இழிவில்லை !
திண்மைக் கென்றும் தளர்வில்லை—என்
தெளிவுக் கென்றும் அசைவில்லை !

நேர்மைக் கென்றும் தாழ்வில்லை—என்
நிகழ்வுக் கென்றும் வீழ்வில்லை !
கூர்மைக் கென்றும் மழுக்கில்லை—என்
கொள்கைக் கென்றும் இழுக்கில்லை !

அன்புக் கென்றும் காய்வில்லை—என்
ஆண்மைக் கென்றும் தேய்வில்லை !
இன்புக் கென்றும் குறைவில்லை—என்
எழுத்துக் கென்றும் மறைவில்லை !

அறிவுக் கென்றும் மருளில்லை—என்
ஆய்வுக் கென்றும் இருளில்லை !
செறிவுக் கென்றும் குழிவில்லை—என்
செம்மைக் கென்றும் சுழிவில்லை !

முயற்சிக் கென்றும் சளைப்பில்லை—என்
முனைப்புக் கென்றும் இளைப்பில்லை !
பயிற்சிக் கென்றும் ஓய்வில்லை—என்
பண்புக் கென்றும் சாய்வில்லை !

போக்குக் கென்றும் முடிவில்லை—என்
புலனுக் கென்றும் நொடிவில்லை !
நோக்குக் கென்றும் ஒடிவில்லை—என்
நுகர்ச்சிக் கென்றும் முடிவில்லை !

பேச்சுக் கென்றும் இடையில்லை—என்
பிடிப்புக் கென்றும் தடையில்லை !
மூச்சுக் கென்றும் முட்டில்லை—என்
மொய்ம்புக் கென்றும் தட்டில்லை !

தோளுக் கென்றும் தொய்வில்லை—என்
தொண்டுக் கென்றும் நைவில்லை !
வாளுக் கென்றும் பழுதில்லை !—என்
வாழ்வும் தமிழும் ஒன்றன்றோ !

# உலகியல் நூறு.

— பெருஞ்சித்திரனுர் —

[மொழிபெயர்ப்பு : த. முத்துக்குமரன், க. இ.]

## 11. வினையியல்.

### 1. சொன்னிலை.

உள்ளமறி வொத்த துறுசொல்லாங் கொன்றிரண்டு
கொள்ளளவே சொற்பயனென் கொள்க—பொள்ளலுறின்
எள்ளுப் படுஉம்; இழிபடுஉம்; ஏற்றவினை
தள்ளுப் படுஉந் தகை. 51

பொழிப்பு : உள்ளவுணர்வும் அறிவுணர்வும் தம் அளவான் ஒத்து வெளிப்படும் சொல்லே பொருந்திய சொல்லாம். அவ்வுணர்வுகளுள் ஒன்றையோ அன்றி இரண்டையுமோ அடிப்படையாகக் கொள்ளுகின்ற அளவைப் பொறுத்தது வெளிவரும் சொல்லின் பயன் என்று கருதுக. அந்நிலையில் இடையீடுபடின், வெளிப்படும் சொல் இகழப்படும்; படவே, அதனுல் மேற்கொண்ட வினை இழிவு பட்டுப்போகும்; போகவே, அதைச் செய்பவரின் தகுதியும் புறக்கணிக்கப்பட்டு விடும்.

## 11. ON THE NATURE OF ACTION.

### 1. OF WORDS.

When head and heart fit in we've words;
One or more the effect records.
Words despis'd is hollow and act
Look'd down, neglect'd in fact 51.

If feelings of the head and the heart fit in well, words that come out do count. Result to accrue will be in accord with the depth of the feelings of the head or the heart. If the base (from which words spring) be hollow, the words will be despised and the act considered low and will, in fact, be totally neglected.

## உ. செயனிலை.

ஒப்பம் அறிவூக்கம் ஊன்றுதிறன் உண்மையெனச்
செப்பமைந் தற்றே செயலென்ப;—செப்பத்தும்
ஒட்பமும் திட்பமும் ஓர்ந்த உரனென்ப ;
நுட்பம் இயற்கை நுழைபு. 52

பொழிப்பு ; ஒரு செயலை மேற்கொண்டவரின் மன ஒப்புதல், அறிவு, உடல் முயற்சி, ஈடுபடுகின்ற திறன், உண்மை எனும் ஐந்து நிலைகளைப் பொறுத்தே அச்செயலின் செப்பமும் இருக்கும். அந்தச் செப்பத்துடன் செயல் தூய்மையும், உறுதிப்பாடும் அச்செயல்வகையில் அவர் ஆராய்ந்தறிந்த திறனைப் பொறுத்தன. அதன் நுட்பச் சிறப்போ அவருக் கியற்கையாகக் கைவந்த அறிவாண்மையைக் கொண்டதாகும்.

## 2. ON DEEDS.

Will, mind, courage work, skill, truth
Are factors five act rests in sooth.
Whole, pure, able you're through care;
But skill is what nature can bare. 52.

Perfection of an act, taken on hand, depends on the five factors of the actor's whole-hearted willingness, keen intellect, tireless work, skill and sincerity. With that perfection, purity and ability will be in full accord with the actor's studied care, but the precision and nicety will spring from knowledge naturally born of ripe experience.

## ௩. முயற்சி நிலை.

முயற்சி முடிவுக்கு முன்வாயில்; மூண்ட
பயிற்சி உயர்வின் படியாம்;—அயர்ச்சியிலா
ஊக்கம் உழைப்புண்மை உண்டால் ஒசிவெனினும்
ஆக்கம் உறுதியெனல் ஆம்! 53

பொழிப்பு : ஒருவரின் முயற்சியே தாம் மேற்கொண்ட செயலின் முடிவுக்கான நுழைவு வாயிலாகும். அவருக்கு அத்துறையில் திரண்டு நின்ற பயிற்சியே அச்செயலில் அவரடையும் வெற்றிக்குப் படிநிலையாகும். சோர்வில்லாத மன ஊக்கமும் உடலுழைப்பும், உண்மையுணர்வும் ஒருவர்க்கிருக்குமானால், இடையில் ஒரோவொருகால் வினைச்சரிவு ஏற்பட்டாலும், இறுதி நிலையில் அவர்க்கு ஆக்கம் உறுதியாக வந்தெய்தும் என்க.

### 3. ON ENDEAVOUR

Trial is entrance to the end,
Endless practice to step high'll tend;
Courage and hard work truly endure;
Despite a slip, one'll prosper sure. 53.

Energetic endeavour is the gate-way to completion of work one has undertaken. Series of attempts in that particular line or branch will be the stepping-stone to one's success. If one has tireless courage, physical labour and true feeling, even if there be a slip in the course of action, one is sure to be crowned with success in the final stage.

### 4. ஊக்க நிலை.

பொருட்குறை யாவும் புலக்குறைவே; ஐயம்
மருட்கறைகள் சூழின் மழுக்கே! — இருட்குறைந்த
ஒள்ளியோர் மேன்மேலும் ஒள்ளியரே செய்வினையால்
வெள்ளியோர் மேன்மேல் வெளிறு. 54

பொழிப்பு : செயலுக்குரிய கருவியின் குறைகள் யாவும் செய்பவரின் அறிவுக் குறைவே. அந்த அறிவுக் குறைவோடு செய்யப்புகும் வினைக்கண் உண்டாகும் ஐயமும், மருட்சியும், குறைகளும் சேர்ந்துவிட்டால் வினை மழுக்கம் ஏற்பட்டுவிடும். அறியாமை குறைந்த அறிவுடையோர் தாம் செய்யப்புகுந்த வினையின் ஈடுபாட்டால் மேன்மேலும் அறிவுத்திறனே பெற்று விளங்குவர். அறிவுக் குறைந்த மூடரோ தாம் செய்யப்புகுந்த வினையின் ஈடுபாட்டால் மேன்மேலும் மூடராகவே விளங்குவர்.

## 4. ON COURAGE.

Shortage's sure lack of knowledge's gain,
Spotty deeds show a clouded brain;
Who're less, keen in work shine the more,
While fool's work brings dots more and more. 54.

Any stortage noticed in the implementation of work only discloses the lack of the doer's knowledge. When one begins to work with this want of knowledge, doubt, confusion and defects will results, and the work will have a blunt edge –. Those who are less ignorant through their pointed interest in their work acquire more and more skill in it and shine well in life. On the other hand, fools who sadly lack wisdom by their Indulgence in work will display their folly all the more.

## 5. ஊதிய நிலை

ஊதியம் என்ப துழைப்பெச்சம்! ஒன்றுண்டால்
யாதினும் யாரும் யாங்காற்றும்—தீதியலா
ஒண்ணேுக்கம் ஒன்றே உயிர்க்கு நுகர்வாகும்
மண்ணேுக்கம் மற்றூர்க்கே மன் ! 55

பொழிப்பு : ஊதியம் என்று சொல்லப்பெறுவது ஒருவரின் உழைப்பிற்குப் பின் நிற்கும் மீதியாகும். அப்பயன் ஒருவழியில் கிடைக்கும் என்றால் எத்தகைய விளைக்கண்ணும் எவரும் எவ்விடத்தும் ஈடுபட முன்வருவர். தீங்கு சேராத உயர்ந்த நோக்கத்தினடிப் படையில் வரும் ஊதியமே உயிர்களின் நுகர்ச்சிக் குரியதாகும். மற்றபடி உலகியல் நோக்குடைய ஊதியங்கள் பிறருக்கே பயன்படுவனவன்றி உழைப்பவருக்குப் பயன்படாதாம்.

## 5. ON EARNING.

Wage's what is left at end of work,
That assured, any will flock.
Spotless is what is fit for life
All else is for the world to strive. 55.

What remains after one's labour is what is defined as earnings. If that benefit is in any way assured, anyone will surely come forward to do any work anywhere. Earning through work, free from evil and done with lofty aim, is alone fit for life's enjoymont All else is more for the world and not for rhe worker.

## 12. செல்வ இயல்.

### 1. ஈட்டல் நிலை.

ஈட்டம் அறிவுழைப்பாங் கேற்கும் இயல்பறிந்து
நாட்டம் மிகுக்கின் நலன்மிகுக்கும்—வாட்டமெலாம்
ஊக்கத்தின் ஒற்கம்; உறுசெல்வம் ஓங்குவினை
ஆக்கத்திற் காமன் றணிக்கு! 56

பொழிப்பு: வருவாய் என்பது அறிவையும் உழைப்பையும் பொறுத்தது. தமக்குற்ற அறிவும் உடலும் ஏற்றுக் கொள்கின்ற வினையின் இபல்பை ஒருவர் அறிந்து கொண்டு, அதில் தம் நாட்டத்தை மிகுப்பாராயின் வந்து சேரும் நலன்கள் மிகுதியாகும். துயரம் என்பதெல்லாம் முயற்சியின் தளர்ச்சியே ஆகும். வந்து சேர்கின்ற செல்வம் உயர்ந்த செயல்களை ஆக்குவதற்கே ஆகும்; அழகுக்கோ ஆரவாரத்திற்கோ அன்று.

## 12. ON RICHES

### 1. ABOUT INCOME.

On knowledge, work, income will rest;
To concentrate on this is best;
Pains do but spell trial's sad lack,
Riches aim high, no beauty back. 56,

Income rests more on wisdom and hard work. Taking up the work that fits in with one's knowledge and ability, if one concentrates on it, benefits to accrue will be immense. Misery is but lack of perseverance. Riches that accrue are for ofty aims and not for beauty of wear or vain glory.

# அறப்பழி குலுங்கும் ஆளுமை இறப்பவழிந்து உய்க, இந்திய நாடே !

*(குறிப்பு: இப் பாடல் ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் சென்னை நடுவண் சிறையில் உள்நாட்டுப் பாதுகாப்பு ('மிசா') ச் சட்டப்படி, காவலில் வைக்கப் பெற்றிருந்தபொழுது, உடனிருந்த அன்பர்கள், அக்கால் இருந்த இந்திரா காந்தியின் கொடுங்கோலாட்சி அகலுமாறு 'அறம் பாடவேண்டும்' என்று வேண்டிக் கொண்டதற்கிணங்க, 17—7—1976 காரிக்கிழமையன்று, காலை 4 மணிககுப் பாடியது. 'இப்பாடலின் பயன் ஆறு மாதத்திற்குள் உறுதியாகக கிடைக்கும்' என்று ஆசிரியர் அவர்கள் உடனிருந்த அன்பர்களிடம அக்கால் சொல்லியிருந்தார். அதன்படி 18—1—77 அன்று பாராளுமன்றக் கலைப்புப்பற்றித் திடுமென அறிவிக்கப்பெற்றது. அதன்பின் நடந்த நிகழ்ச்சிகளை வெளிப்படையாக அன்பர்கள் அறிவர். ஆச்ரியரின் மெய்ப்பொருளுணர்வு எவ்வகையில் உண்மையானது என்பதற்கு இஃதொரு சான்றாகும். இப்பாடலும் வரலாறும் ஆசிரியரின் நூறாசிரியத்துள் இணைக்கப்பெறும்.- மா. பூங்குன்றன்.)*

ஆரியப் பதடியர் அருந்தமிழ் செகுக்கும்
பூரியக் குறும்பின் புல்லியர் ஆட்சி
என்றினித் தீருமோ இரிந்துகால் முரியுமோ ?
மன்றிடைத் தமிழினம் மலர்ந்து மணக்குமோ ?
காமரா செனுமோர் கடமைத் தமிழ்மகன்
ஏமுறச் சூழாது இந்திரா வென்னும்
மெய்ம்மை வெளிறி மிக்குரை செருக்கும்
கைம்மைப் பார்ப்பினிக் கையகப் படுத்திய
இந்திய முழுநிலம் ஏற்றமுற் றுய்யுமோ ?
முந்திய உரிமையும் முளைத்துச் செழிக்குமோ ?

அறமுறை மன்றின் குரல்முறை நெரித்து
மறமுறை வலித்து மக்க ளாட்சியின்
முற்றா ளுமைநெறி முழுவதும் பற்றிக்
கற்றோர் நிறைமனம் கசிந்துலை வுற்றிட
வல்லதி காரம் வழிவழிக் கொளுவுமோர்
சொல்லுதிர்த் திசைக்கும் சூழ்ச்சியோ ளாகி
நிகரமை எனும்பெயர் சாற்றி நெறிபிறழ்ந்து
தகவுகுத் தரும்பெறல் தலைவருந் தொண்டரும்
வெஞ்சிறை யொடுக்கி விளம்பரந் தருக்கி
அஞ்சுறை மக்கள் அறியாமை நிலத்துள்

திரைவா ளொலிபொடு தாட்கொழு வுழுது
புரையும் பொய்யும் புனைவதும் வித்திக்
கள்ளத்துக் கொண்ட களவூ தியத்தின்
வெள்ளம் பாய்ச்சி விரகுகள் விளைக்கும்
அறப்பழி குலுங்கும் ஆளுமை
இறப்பவழிந் துய்க இந்திய நாடே !

O ஐயை ஓர் அழியாத பாவியம் ; குலவிளக்கம்!

O அனைத்துப் பெண்டிர்க்கும் ஒரு கலங்கரை விளக்கம்!

O சிறையிலே எழுந்து சிறையிலேயே முற்றுப்பெற்ற சித்திரப் பாவியம் ஐயை!

O ஐயை நூல் வடிவாகவே வெளிவருகின்றது.

என்றோ ஒருநாள் ஏந்தலும் வருவான்;
அன்றிலை மணப்பான்; அணைப்பான்; என்றே
ஏங்கிட நாட்களை எண்ணிய ஐயையின்
நோக்கம் நிறைவேறிற்றா? அல்லது
ஏக்கந்தான் மிகுந்ததா? உள்ளத்தை உருக்கும் முடிவு!

O தீந்தமிழ்ச் சுவை துள்ளும் பல்சுவை யாப்பின் செந்தமிழ் நடையில் ஐயையின் 2 ஆம் பகுதி உருவாகியிருக்கின்றது!

O அன்பர்களின் அவா நீக்க விரைவில் கிடைக்கும்.




| | | |
|---|---|---|
| 1, | முதல் பகுதி [புதிய பதிப்பு] | 2—00 |
| 2, | 2-ஆம் பகுதி | 3—50 |
| 3, | இரண்டு பகுதிகளும் இணைந்த முழு நூல் | 5—00 |
| 4, | ஆங்கிலப் பதிப்பு (முதல் பகுதி) | அச்சில் |

அமைச்சர், தென்மொழி சென்னை-5.

# மறைமலையடிகள் பிள்ளைத்தமிழ்.

—புலவர். இறைக்குருவனார்.

முன்னுரை.

முற்றும் அயன்மொழி விரவாத் தனிச்செந்தமிழில் இயன்ற 'மறைமலையடிகள் பிள்ளைத்தமிழ்' என்னும் இச் சிற்றிலக்கியத்தின்கண் இயற்கை யிகந்த உயர்வுநவிற்சியோ போலித் தொன்ம(புராண)க் கதைச் செய்திகளோ இடம்பெற்றில; இயற்கை நிகழ்ச்சிகளும் உண்மைச் செய்திகளுமே அணி நயம்படப் புனையப் பெற்றிருக்கின்றன.

சிறு தெய்வ வணக்கம் முழுமுதற் கடவுள் வழிபாட்டு நெறிக்கும், அதனை வலியுறுத்தும் பாட்டுடைத் தலைவர், நூலாசிரியன் கோட்பாடுகளுக்கும் ஏலாமையின் காப்புப் பருவத்தின்கண் அம்மையம்பலவாணர், தமிழ்த்தாய், சமயச் சான்றோர், முத்தமிழ்ப் புலவோர், உரையாசிரியர், கணக்காயர், ஆராய்ச்சியாளர், பல கலைவாணர், ஆட்சியாளர், பொதுத்தொண்டர் என்னும் பதின்மர் வழுத்தி வேண்டிக் கொள்ளப்பெற்ற தன்றித் திருமால் முதலிய பதின்மர் அங்ஙனம் வேண்டிக் கொள்ளப்பெறவில்லை. அற்றேல் இஃது ஆன்றோர் வழக்கொடும் மாறுபட்டதோவெனின் பெரும்புலவர் மீனாட்சிசுந்தரனார் இயற்றிய சேக்கிழார் பிள்ளைத் தமிழின் காப்புப் பருவத்தில் தில்லை வாழ் அந்தணர் முதல் மன்னியசீர் மறைநாவன் ஈறான பதினொரு பாடலில் சிவனடியார் பெருமக்களே வழுத்தி வேண்டப்பெற்றிருத்தலின் இஃது ஆன்றோர் வழக்கொடும் மாறுபட்டதாகாது.

பாட்டுடைத் தலைவரான அடிகளார்தம் கொள்கைகள், நூல்கள் நிறுவனங்கள், வரலாற்று நிகழ்ச்சிகள் முதலியனபற்றிய சிறப்புச் செய்திகள் யாவும் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் இந்நூலின்கண் இடம்பெற்றுள்ளன.

அடிகளார் நெறியில் படிந்த உணர்வொடும் பணியாற்றுவதில் முனைப்பும் உறைப்பும் உடையேமை, அடிகளாரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட இச் சிற்றிலக்கியம் ஆக்கும் முயற்சியில் ஈடுபடுத்தி முற்றுப்பெறுவித்த திருவருளை வழுத்தி வணங்குகின்றேம்.

—நூலாசிரியர்.

## கடவுள் வாழ்த்து

உலகெலாந் தோற்றியுங் காத்தும் ஒடுங்கியும்
ஓவா தருள்வெளிக்குள்
உயிரினம் மேன்மேற் றழைத்துச் சிறப்புற்(று)
உயர்ந்துபே ரின்பங்கொள
அலகிலாப் பலவிளை யாடல்செய் மாட்சியான்
அறிவினின் மேம்படுத்தி
அகத்துணரும் முழுமுதற் செம்பொருள் எனநின்ற
ஆர்ந்தபெரு மெய்மையொளியே!
இலகுநற் செந்தமிழ் திருநெறி எனப்படுவ
இருள்வயப் பட்டநிலைமை
[1]இரிவுறத் தமிழினம் எழுச்சியுற் றோங்கிட
இருநிலம் வியக்குமாறு
பலதலைய வாயநற் றெண்டினால் ஆழ்ந்தினிது
பாரித்த நுண்ணறிவினால்
பாங்குயர் தவத்தினால் வீங்குபுகழ் மறைமலை
[2]பைந்தமிழ் [3]சிறக்கவென்றே!

---

1. இரிவுற - நீங்க. 2. பைந்தமிழ் - பிள்ளைத்தமிழ்.
3. வென்று - சிறக்க.

## க. காப்புப் பருவம்.

1.

### அம்மை அம்பலவாணர்.

மலர்தலைய பலகோடி யண்டங்கள் யாவையும்
மாறுபா டின்றியாண்டும்
மன்னிநின் றுங்கவை தந்நெறி இயங்கிட
மன்னுயி ரெலாங்[1]களிப்ப
மலரனைய நெஞ்சினும் மாமன்ற நடுவினும்
மருவிநின் றுடல்கொண்டு
மம்மரொன் றில்லாத செம்மையே அருள்செய்யும்
அம்மையம் பலவபோற்றி?

குலவுநற் றமிழர்தங் கொள்கையாஞ் செந்நெறிக்
[2]கொண்முடிபு தன்மேன்மையும்
கொழுந்துவிட் டொளிர்கின்ற செந்தீவிளக்கமே
குறிசிவ [3]இலங்கமென்னும்
உலகுபுகழ் மெய்ம்மையும் வையகம் உய்யுமா(று)
உணரத்துநன் மெய்த்தவத்தோன்
உயர்[4]மூலன் மரபில்வரு பெயரோங்கு மறைமலை
ஒள்ளியற் காத்தருள்கவே!

1. கலிப்ப - தழைக்க. 2. கொண்முடிபு - சித்தாந்தம். 3. இலங்கம் - இலிங்கம். 4. திருமூலர் மரபில் வந்த அரசாணந்த அடிகளார் மறைமலையடிகளுக்கு மந்திரம் அருளினர் என்பது வரலாறு.

## தமிழ்த்தாய்.

'அம்மா' வெனச்சொல்ல எந்தமக் கருள்செய்யும்
அமுதவடி வானயாயே!
அனைத்துலகம் எங்கணும் ஆட்சிபெற் றொளிர்கின்ற
அறிவார்ந்த மூலமுதலே!
செம்மாந்து [1]பேறுபதி னாறுமுற் றுங்கொண்டு
திகழ்கின்ற பெருமாட்டியே!
சீரார்ந்த தென்குமரி நாடாண்ட நாயகி!
திருவளர் செல்விபோற்றி!
இம்மா நிலத்துமுதன் மாந்தன் பிறந்தகம்
இருங்கடற் குமரிநாடே
இயம்பிடு முதன்மொழி அவன்நா வசைத்திட
எழுந்தநற் றமிழேயென
எம்[2]மா திரத்தினுந் தன்மா பெரும்புலம்
இலங்குற எடுத்துரைத்தேன்
ஏறெனப் பொலிவுகொள் வீறுயர் சால்பினெம்
[3]ஏந்தலைக் காத்தருள்கவே!

1. தமிழின் பதினாறுவகைப் பேறுகளாவன செம்மை, மும்மை முதலியன. 2 மாதிரம் - திசை. 3. ஏந்தல் - ஆண்பாற் சிறப்புப்பெயர்.

## சமயச் சான்றோர்

வையத்து வாழ்வாங்கு வாழ்ந்துமேம் பாடுற
வயங்குபுகழ் நிலைநிறுத்த
வான்பதம் பெறுமற்று யான்என தறச்செய்
வழிப்படுத் தொண்மைசான்ற
மெய்யகப் பொருளுணர்ந் துய்வுகொடு பேரின்பம்
மேவுநெறி யிற்புணர்த்தும்
மேனுள் தொடங்கிவரும் ஆணுதசீர்த்தியின்
மேலாய திருமரபினீர் !
பொய்யகத் தோன்மங்கள் புகலுவன சிவனியப்
பொருள்நெறிய வாகாவெனப்
போற்றுசிவ தெறி[1]பழந் தமிழ்க்கொள்கை பேயெனப்
பொருந்துமுரை செய்தெமக்குக்
கையகத் துற்றதீங் கனிபோல் விளக்கியெங்
கைதூக்கி [2]ஆதரிக்கும்
கருதுதவ மேன்மையின் ஒருவனென வந்தவெங்
கண்மணியைக் காத்தருள்கவே !

---

1. பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம்' என்பது அடிகளார் நூல்களுள் ஒன்று. 2 ஆதரித்தல் - ஆக்கத்திற்குத் துணை செய்தல் என்னும் பொருளுடைய தமிழ்ச்சொல்.

---


# பழைய படிகள் சலுகை விற்பனை !

## தென்மொழி அன்பர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு !

*தமிழ் நலங்கருதியும், அறிவு விளைவு நோக்கியும், பழந் தென்மொழி இதழ்கள், சுவடி 10 முடிய. சில இடை ஓலைகள் தவிர்த்த அனைத்து ஓலைகளும், தனிப்படி ஒன்று 25 காசு மேனி விற்பனைக்குக் கிடைக்கும்.*

*இச்சலுகை விற்பனை இரண்டு மாதங்களுக்கு மட்டுந்தான் !*

*பழைய இதழ்கள் கிடைக்காத அன்பர்கள் தங்களுக்கு வேண்டும் மொத்த இதழ்களுக்குரிய தொகையுடன் அஞ்சற் செலவையும் சேர்த்து விடுத்து. உடனே படிகளைப் பெற்றுக் கொள்வார்களாக.*

*100 படிகளுக்குமேல் பெறும் விற்பனை முகவர்களுக்கு 25 விழுக்காடு கழிவும் கொடுக்கப்பெறும்.*

*உடனே முந்துக ! மாணவர்களையும் அன்பர்களையும் ஊக்குக*

*—அமைச்சர் தென்மொழி, சென்னை–5.*

# தனிம வரிசை

இல். க. இரத்தினவேல், அறி. மு.
அறிஞர் அண்ணு அரசினர் கல்லூரி, செய்யாறு-604407.

## 2. தங்கம் (GOLD) $Au^{197}_{97}$

"......................................

அளகேசன் நிகராக
அம்பொன்மிக வைத்த பேரும்
நேசித்து இரசவாத
வித்தைக்(கு) அலைந்திடு"ம்.

தங்கம் என்ற உடனே மகளிர்க்கு உண்டாகும் கிளுகிளுப்பையும், ஆடவர்க்கு ஏற்படும் பதைபதைப்பையும் விண்டுரைக்க இயலாது. தங்கத்தை மாந்தன் கண்ட நாளில் இருந்து, இன்று வரை–ஏன் வருங்காலத்திலும் அவனுக்கு அதன் மீதான வேட்கை தணியவே தணியாது. அதற்கு ஏன்தான் இவ்வளவு கவர்ச்சியோ? தங்கம் திண்மை மிக்கது. அதன் ஒப்படர்த்தி 19·3. அஃதாவது நீரைப்போல் 19 மடங்கும், இரும்பைப்போல் $2\frac{1}{2}$ மடங்கும், வெள்ளியைப்போல் 2 மடங்கும் கனம் மிக்கது. அணிகலன் செய்யும் பணிக்கு மிக எளிதானது. ஒரு அயிர மாத்திரை (மில்லிமீட்டர்) யில் 1000-இல் 1 பங்குத் தடிமம் உள்ள படலமாகக்கூட தங்கத்தை இழைக்கலாம். அடர் மஞ்சள் நிறம். நமது அண்டத்தின் (Universe) நடுநாயகம் ஆன கதிரவனின் நிறம்; புனிதத்தன்மைக்கும் ஏற்றது. பளபளப்பு மிக்க மாழை (Metal). தோற்றப் பொலிவு மிக்கது. மாற்றுக் குறைவில்லாதது, நீடித்து நிலைக்கக் கூடியது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உருவான பொன் அணிகலன்கள் இன்றும் சிதைவின்றி அகழ்வாராய்ச்சியில் கிடைத்திருக்கின்றன.

இவை யாவற்றுக்கும் மேலாக உலகில் கிடைக்கும் தங்கத்தின் அளவு மிகமிகக் குறைவு. ஆகவே தங்கத்துக்கான வேட்கை தணிய வாய்ப்பில்லை. மற்றத் தனிமங்கள் பெரும்பாலும் கூடிகை (Compound) ஆகக் கிடைக்குங்கால் தங்கம் தனித்தங்கம் ஆகவே

கிடைத்தது கங்கை போன்ற ஆற்றுப் படுகைகளிலும் தங்கம் கண்டறியப்பட்டது.

தங்கத்தின் பெயர்: 'தகதக'வெனச் சொலிப்பது தங்கம். தகு-தங்கு-தங்கம் மழமழப்புடையது மாழை; பொலிந்து தோன்றுவது பொன். (பொல்-பொலம்-பொன்) மாழை, பொன் இரண்டும் உலோகத்தைக் குறிக்கும் பொதுச்சொல். 'பூ' என்றாலே தாமரைப் பூவைக் குறித்தமை போல (பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை; பூவெனப் படுவது பொறிவாழ் பூவே) பொன் அல்லது மாழை என்றாலே உலோக அரசனாகக் கருதப்பட்ட தங்கத்தையே முதலாகு பெயராக் குறித்து வந்தது. மாழை-மாடை-மாசை, மாசை என்பது பொற்காசு. மாழைகளுள் வனப்பு மிக்கது என்பதால் அம்பொன் (அம் = அழகிய, சிறந்த) எனவும் வழங்கப்பெற்றது.

எகுபதியர் மொழியில் உருக்குதல் என்று பொருள்படும் nub என்ற படவெழுத்துச் சொல் தங்கத்தைக் குறித்தது இதனால் எகுபதியர் முதல் முதலாக உருக்கிய மாழை தங்கம் என்று அறியலாம்.

இதளித்தல்: தங்கத்தை இதளிக்கும் கலை, (கி.மு. 2-ஆம் நூற்றாண்டு) பிளினியின் காலத்திலேயே வழக்கில் இருந்தது, இதள் அல்லது இதரம் என்பது பாதரசம் (Mercury). பாதரசத்தில் தங்கத் தாதுவைக் கரைத்து, வடிகட்டி, கலப்பை நீக்கித் தங்கத்தை மட்டும் மீட்பதை இதளித்தல் என்பர்.

தங்கம் கிடைப்பதற்கு அறியதாகவும், விலை மதிப்பு மிக்கதாகவும் இருந்ததனால், இயற்கையில் கிடைக்கும் தங்கத்துக்கு ஒப்பாக,

*தங்கம் மிகுதியாகக் கிடைக்கும் கண்டங்கள் ஆப்பிரிக்காவும், அமெரிக்காவும் தாம். தென்னாப்பிரிக்கா நாடு ஒன்று மட்டும் அனைத்து உலகத்தின் தங்கத்தில் நூற்றுக்கு 60 மேனியைத் தோண்டி எடுக்கிறது. கொலம்பசு அமெரிக்காவைக் கண்ட 1492 முதல் 1600 வரையில் ஆன நூறு ஆண்டுக் காலத்தில் ஐரோப்பியர் அமெரிக்காவில் இருந்து அடித்துவந்த தங்கம் மட்டும் 2270 இலட்சம் கிராம்கள்.*

இதரத்தையும் செம்பையும் பயன்படுத்தி செயற்கைத் தங்கத்தை ஆக்கும் முயற்சி, உலகெங்கும் காலாகாலமாகத் தொடர்ந்து நடந்து வந்தது. ஆனால் பளபளப்பு மிக்க செம்பைத்தான் அவர்கள் பார்க்க முடிந்ததேயன்றி உண்மையான தங்கத்தையன்று. இயைபியல் முறைகளால் செம்பில் இருந்து தங்கத்தை உருவாக்க இயலவே இயலாது. எனினும் இந்த 'இரசவாத வித்தை'யால் அரிய பயனும் விளைந்தது. இவ்வாறு தங்கத்தைச் செய்ய முற்பட்டு 'ஒன்றுவிட்டு ஒன்று பற்றிய' பல்வேறு முயற்சிகளால்தான் இயைபியல் (Chemistry) மாபெரும் வளர்ச்சி யடைந்தது.

தங்கத்தில் இந்தியா முதலாவது !

இந்தியாவில் சிந்து சமவெளி அகழ்வாய்வில் கிடைத்த தங்க வெள்ளிக்கலன்கள், நம் மூதாதையரின் தங்க வேட்கையைத் தெளிவு படுத்தும். உலகில் எந்த வளர்ச்சியிலும் அன்றி எந்தக் கனிய இருப் பிலும் (Ore deposits) இன்றைய இந்தியா பின்தங்கியதாக இருந் தாலும் தங்கம் ஒன்றில் ஒருவகையில் முதலாவதாகத் திகழ்கிறது. நடமாடும் தங்க மாளிகைகளாக, உலகிலேயே தனியார் வசம் மிகுந்த தங்கம் இருப்பது இந்தியாவில்தான் ! ஆனால் இந்தியா வின் மொத்தத் தங்க இருப்பு பிறநாடுகளைக் கருதுங்கால் மிகமிகக் குறைவே !

மாழைகளின் அரசன் (King of metals) ஆக - ஏன் கடவு ளாகத் தங்கம் கருதப்பட்டு வந்தது. பழங் கிரேக்க அறிஞர்கள்

---

**தங்கச் சுரங்கத்தின் விலை ?**

*உலகின் மிக முகாமையான தங்கச்சுரங்கத்தின் விலை என்ன வாய் இருக்கும்? பெரும் தங்கச் சுரங்கம் இருக்கும் நகர் ஆப் பிரிக்காவில் உள்ள சோகன்னசுபுரி (Johannesburg) என்று அறிவோம். அங்கு ஊசுதுாய்சென் (Oosthuisen) என்னும் கைம்பெண் ஒருத்தியின் பண்ணையில் தங்கம் கிடைப்பதை அறிந்த சார்சு ஆரிசன் (George Garrison) என்ற வைரச் சுரங்க உடைமையாளர் அந்தப் பண்ணையை விலைக்கு வாங்கி மறு விலைக்கு வேறொருவருக்கு விற்றுவிட்டார். எவ்வளவுக்கு என்று எண்ணுகிறீர்கள் ? வெறும் இருநூறு ரூபாய்க்குத்தான்!*

தங்கத்தை அப்போல்லோ (Apollo) என்ற முழுமுதற் சூரியக் கடவுளாகவும், அரசனாகவும் உருவகித்திருந்தனர். சூரியனின் வடிவம் அல்லது அரசனின் உருவம் தங்கத்தைக் குறித்தது. சூரியனுக்கும் தங்கத்துக்கும் ஆன பழம் குறியீடு ஒன்றே. தங்கத்துக்கான இலத்தீன் சொல் Aurum என்பதால் பெர்சீலியசு (Berzelius)-இன் முதலெழுத்துக் குறியீட்டு முறையில் Au எனக் கொடுக்கப்பட்டது.

14 காரட் ?: அணிகலன்கள் செய்யப் பயன்படும் தங்கம் மாழைக் கலப்பு உடையதாகும். தூய தங்கம் 24 காரட் (Carat). பொன்னை உருக்கிப் புடமிட்டுச் சிதைத்தாலும் தன்னியல்பு மாறாத தூய் 24 காரட் தங்கம்தான் தனிமத்தங்கம். இதனை நகத்தால் கீறி விடலாம். இதனை வன்மைப்படுத்த செம்பு கலக்கப்பெறும். 22 காரட் தங்கம் என்பதில் 22 பங்கு தங்கமும் 2 பங்கு செம்பும் கலந்திருக்கும். 14 காரட் என்பதில் தங்கம் 14 பங்கு; செம்பு 10 பங்கு. செம்புடன் கலந்த தங்கம், அதன் மாற்றுக்குத் தக்க பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டது. உரிச்சொல் நிகண்டில் (6:1; 6:2) தங்கத்தின் 30 பெயர்களே தரப்பட்டுள்ளன. இதற்கு நம் நாட்டில் 44 பெயருக்குக் குறையாமல் வழங்குவதே தங்கத்தின் மீதான தணியாக் கவர்ச்சியைத் தெளிவாக உணர்த்தும்.

*மாசை,பீ தகம்,(ஏ) பீதம். மாடை,(யே) மாடு, வேங்கை,*
*ஆசை,(யே) சுவணம், காரம், அருத்தம்,காஞ் சனம்,(ஏ)காணம்*
*தேசிகம், கனகம், கைத்து, செந்தாது, பொலம்(ஏ) அத்தம்,*
*(பேசிய) சாமி, வித்தம், பெரும்தனம் உடல்.(ஏ) பண்டம். 23*

*இரணியம், நிதி,வெ றுக்கை, ஈகை,கல் யாணம், ஏமம்*
*பொருள்,உரை, சந்தி ரம்,சாம் பூனதம், பூரி, ஈழம்*
*திரவியம், சாத ரூபம், செங்கோல், நிதானம், மாழை*
*அரி,தப னியம்ஆ றேழும், அம்பொன்,ஆ டகமும் ஆமே. 21*

*(மண்டல புருடர்)*

## அன்பர்கள் கவனத்திற்கு

*கடந்த ஓராண்டுக் காலமாகத் 'தென்மொழி' அலுவலகம் முறையாகச் செயல்பட முடியாதபடி பல்வகை இடையூறுகள் இருந்தன. எனவே, தென்மொழி விடுப்பதில் பல குழறுபடிகள் நேர்ந்திருக்கலாம். அன்பர்கள் அவற்றைப் பொருட்படுத்த வேண்டா. முறையான அலுவல்கள் தொடங்க இன்னும் ஓரிரண்டு மாதங்கள் ஆகலாம். அதுவரை, முன்பே பணம் விடுத்து இதழ்கள் கிடைக்கப்பெறாத அன்பர்கள் தங்கள் உறுப்பினர் எண்கள், அல்லது தொகை விடுத்த விளக்கங்களுடன் புதிதாகத் தொடர்புகொள்ள வேண்டுகின்றோம்.*

அமைச்சர், தென்மொழி.

# இக்காலத்துப் புல்லிசையும்,
# சுந்தரேசனார்தம் நல்லிசையும்!

[குறிப்பு: குடந்தைப் பண்ணாராய்ச்சிப் பேரறிஞர் ப. சுந்தரேசனார் அவர்களின் மணிவிழா வாழ்த்தாக (1975-இல்) எழுதி விடுத்த பாடல் இது. தென்மொழியன்பர்களுக்காக இங்கு வெளியிடப் பெறுகிறது:)

1. இக்காலை மேவும் இசைநயத்தைக் கேட்பதற்குச்
செக்காடும் ஓசை சிறப் பெனலாம்!—அக்காலை
தக்க குருவழியாய்த் தாம்பயில்வர்; இக்காலை
திக்காலுக் கொன்றறிவார் தேர்ந்து!

2. பண்ணறிந்து தாளம் பயில்வறிந்து நல்லிசைமேல்
விண்ணெனன் குரலால் விளங்கும், அன்று!—மண்ணுதிரும்
மொத்தைச் சுவரடிபோல் மொத்தும் முழவடிக்குக்
கத்தலே நல்லிசை,இக் கால்!

3. சொல்லும் பொருளுமொரு சோர்வின் றிசையோடு
செல்லும்; மனம்செவியில் சேரும், அன்று!—கல்லோ
டொருபதமு மின்றிச்சோ றென்றிரண்டாய் வெந்த
திருபதாம் நூற்றாண் டிசை!

4. வானரமும் வந்தமரும்; வல்லரவந் தான்மயங்கும்;
ஏனற் புனத்தினற்றை யின்னிசைக்கே!—ஆனேறிங்(கு)
ஆவுக்குக் கத்தும் அனற்றல்போல் இக்காலை
ஈவுக்குக் கத்தல் இசை!

5. பக்கலிசை ஊடியொரு பக்கம்போம்; பாடுபவர்
முக்கலிசை தாளத்தை முட்டிநிற்கும்;—கக்கல்போல்
எக்கல் எடுக்கல் இரைக்கலெனும் ஓசையைத்தான்
இக்கால் இசையென்பார் இங்கு!

6. தேர்ந்தவிசை வேண்டின் தெலுங்கிசைதான்! மற்றெங்கும்
ஆர்ந்தவிசைக் கிந்திதான் ஆட்சிசெய்யும்!-ஏர்ந்தொருகால்
நல்லவிசை கேட்குமெனில் நல்லதமிழ்ப் பண்ணிருக்கும்;
சொல்லோ சமற்கிருதச் சொல்!

7. இரைப்பெடுத்த ஓசை! இழுப்பெடுத்த கூவல்!
வரைப்படுத்த ஆகா வசையாம்!—திரைப்படத்தின்
பாடலைத்தான் சொன்னேன், பயின்றுவரும் பாடலுக்கோ
ஆடலைத்தான் கண்டே அறி!

8. காட்டு விலங்குகள்போல் கத்தும் கருவியிசை!
பாட்டோ புயல்மழைசேர் பண்ணாகும்! — நீட்டுகின்ற
நெட்டிழுப்போ வெண்முழக்கு நீள்காதுப் பாடகனை
விட்டெழுப்பி யோட்டும் விரைந்து!

9. பெருங்குருகு நாரை இசைநுணுக்கம் தாளம்
ஒருங்குணர்ந்த பாப்புலவர் ஓர்கால் — வருங்கடையில்
இக்கால் பயிலும் இசைகேட் டுடனிறப்பார்;
எக்காலுந் தாம்பிறவார் இங்கு!

10. இந்தியிசை மேலை இழுப்பிசை எல்லாமும்
செந்தமிழின் நல்லிசையைச் சீரழிக்கும்—நொந்ததமிழ்
உள்ளமே நீ,இனிமேல் ஒப்பாரி வைத்திடுக!
பள்ளமுன் காதுப் பறை!

11. இழுக்குடைய பாட்டிற் கிசைநன்று; நன்று
மழுக்குடைய புல்லிசைக்கு மாய்தல்—புழுக்கறையுள்
பட்டதே போலுமிந்நாள் பாட்டென்றால், பாம்பெடுத்து
விட்டதே போலும் இசை!

12. புல்லிசையில் இன்னே புழுங்குமனம் சுந்தரர்தம்
நல்லிசையில் ஆடி நனைந்ததே! — வல்லஇசைப்
பாவாணர் சுந்தரரால் பண்டைத் தமிழ்ப்பண்கள்
மேவாவோ இவ்வுலக மேல்!

13. பண்ணாய்வுப் பாவாணன் பாடும் தமிழிசையில்
புண்ணாகிப் போனவுளம் பூத்ததே! — மண்ணாகிப்
போகட்டும் புல்லிசைகள்! பூக்கட்டும் சுந்தரர்தம்
பாகிட்ட செந்தமிழ்த்தீம் பண்!

14. சுந்தரே சன்றன் சுரும்பாரும் இன்னிசையில்
செந்தமிழே ஆர்க்கும் சிறப்பறிவார்—எந்தமிழை
முத்தமிழே என்று முழங்காரோ? பின்வியந்தே
அத்தமிழ்க்கா காரோ அரண்?

15. அறுபானுன் டாகும் அகவையினுன், மேலும்
அறுபானுண் டந்தமிழ்க்கே ஆகி—மறுபோக்கிப்
பண்ணாய்ந்து செந்தமிழ்த்தீம் பாவில் இசையேற்றி
விண்ணாய்ந் திடுக வியந்து!

○

# திருவள்ளுவர் யார்?

சேலம் புலவர். க. நடேசனார்.

[முன் இதழ்த் தொடர்ச்சி]

மேற்காட்டிய குறளும் அதன் சொற்பொருளும் விளக்கமும் காட்டுவதென்னை? சைனர்கள் கொள்கை—மகளிர்க்கு வீடு பேறு இன்று எனும் கொள்கை—வள்ளுவர்க்கு உடம்பாடு அன்று; வள்ளுவர் சைனர் கருத்துக்குமாறுபட்டவர் எனக்காட்டும். மேலும் சைனர்கள் பெண் பிறப்பை—கற்புடைய பெண் பிறப்பைக்கூட—மிக மிக இழித்துப் பேசுவர். இதற்கு மேற்காட்டிய பாடற் பகுதிகளே. சீவகன் மனைவியராய் மாட்சிமையுற்ற கற்புடைப் பெண்டிரைப் பற்றிப் பேசும் பாடற் பகுதிகளே,

'ஏழைப் பெண் பிறப்பு' 3120

'ஏசு பெண் ஒழித்து இந்திரர்களாய்த் துறக்கம் எய்தினர்'' 3121

என்பவைகளே, போதிய சான்றும். வேறுபல உண்டு. அவை இங்கு வேண்டாம். பெண்களை இங்ஙனம் பழிப்பது வள்ளுவர் நெறி அன்று. பெண்களைப் பழிக்கும பெரியாரையும் நெறியாரையும் நோக்கி,

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள?' 54

எனக்கேட்பர் வள்ளுவர். இதனையும் மேற்படி அதிகாரத்திலேயே—வாழ்க்கைத் துணை நலத்திலேயே—காணலாம். 'மகளிர் மனம்போல வேறுபடும்' (822) என 'இனம்போன்று இனமல்லார் கேண்மை'க்கு உவமையாகக் கூறப்பட்டவர்கள், இருமனப பெண்டிரே யாவர்; பெண் போன்று பெண்ணியல்பற்ற வரையில் மகளிரே ஆவர். இழிதக்க இப் பெண்டிர், எவராலும் பழிக்கப்படுபவரே என்பது எல்லார்க்கும் உடம்பாடே. 'ஒருமை மகளிரே போல' (974) எனப் பெருமைக்கு எடுத்துக்காட்டாக்கியும் ஆடவர்களோடு நிகராக்கியும் மகளிர் போற்றப்படுதலை வேறிடங்களிலும் காணலாம். எனவே பெண் பிறப்பைப் பொதுவாகப் பழிப்பது வள்ளுவர் நெறிக்கு ஏலாது. ஆதலின் இங்ஙனம் பழிக்கும் சைனர்கள், வள்ளுவர் நெறிக்குப் புறம்பானவர்கள் எனக் கருதுவர் சிலர்.

சைனர் மற்றொன்றும் கூறுவர். சுக்கிலத்தியானம் என்பது மெய்யுணர்வுக்குக் காரணமாய பரமத்தியானம் என்பது—இக்காலத்

தில் உண்டாவதில்லை எனச் சைனர்ச்சாத்திரங்களும் கூறும் (திரவிய சங்கிரகம். தமிழுரை. பக். 120). காண்க. ஆனால் வள்ளுவரோ, ஐயமறத் தெளிவுற்ற பெரியார்க்கு இவ்வையத்திலேயே—இக்காலத்திலேயே—இப்பிறப்பிலேயே-'மெய்யுணர்வு' எய்தல் கூடும் என்பர்,

*ஐயத்தில் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தில்*
*வானம் நணிய துடைத்து* (353)

எனல் காண்க. தெளிந்த அறிஞர்க்கு இக்காலத்திலும் எக்காலத்திலும் மெய்யுணர்வுண்டாம் என்னும் இக்கருத்தும் சைன சாத்திரங்களின் கருத்துக்கு மாறுபட்டு நிற்றலை உணர்க. எனவே வள்ளுவர் சைனச் சார்புடையவர் எனும் கருத்துக்கு இதுவும் தடையாதல் அறிக.

உலகுக்கு ஒரு முதல்வன் — காரணன் — வேண்டுவதில்லை. எனவே உலகம் ஒரு முதலை உடையதன்று. அதனால் அது அநாதி; முதலற்றது; முடிவற்றது என்பதும் சைனர் துணிபு. இதுபற்றி,

*"மூவா முதலா உலகம் ஒரு மூன்றும்"*

எனக் கூறும் சிந்தாமணி முதற் பாட்டு. இதற்கு மாறாக,

*"உலகு பகவன் முதற்று"* (1)

எனக் கூறும் திருக்குறள் முதற் பாட்டு. எழுத்தொலிக்கெல்லாம் காரண முதல் அகரம்; உலகுக்குக் காரண முதல்வன் அவ்வகரத்திற்கு ஆதியான பகவன்; ஆகவே உலகம் அநாதியன்று; தோற்றத்திற்குட்பட்ட ஆதியே. ஆதிப்பொருளாகிய உலகத்துக்குக் காரணன் — முதல்வன் — பகவனே என்னும் இக்குறட் கருத்தும், உலகம் அநாதி எனும் சைனக் கருத்துக்கு மாறுபடுகிறது. இங்ஙனம் பலப்பல வகையில் வள்ளுவர் சைனத்தொடு மாறுபடுவதாகத் தெரிவதால் வள்ளுவர் சைனச் சார்புடையவரல்லர் என்பது பலர் கருத்து. 'அற ஆழி அந்தணன்' 'மலர்மிசை ஏகினான்' போன்றவை பற்றிக் 'கடவுள் வாழ்த்து' ஆராய்ச்சியில் காணலாம்.

### சாங்கியரா ?

திருக்குறள் 27-ஆம் பாட்டில் பரிமேலழகர் சாங்கிய முறையில் தத்துவ விளக்கம் செய்திருத்தலைக் கண்டு அவரைச் சாங்கியரே என முடிவு கட்டப் பார்க்கின்ற அறிஞரும் சிலருண்டு. தத்துவ முறைகள்

பல. அவ்வச் சமய நெறிக்கும் தனித்தனி தத்துவ விளக்கங்கள்—முறைகள்—பற்பல உண்டு. சாங்கிய தத்துவம், புருட தத்துவம் வரையில் 25 தத்துவங்களையே ஏற்றுத் தன்னெறியை விளக்கும் அது. 'பர தத்துவம்' எனப்படும் சில தத்துவங்களை—கடவுள் தத்துவங்களை—ஏற்றுக்கொள்வதில்லை. இதனைப் பரிமேலழகர் உரையாமலேயே அறிந்துகொள்ளலாம். வள்ளுவர் 'கடவுள் வாழ்த்து' என ஒன்று கொண்டவர். எனவே, அவர் கடவுள் தத்துவங்களை ஏற்றவரேயாதல் வேண்டும். ஆகவே வள்ளுவர் சாங்கியராகார். சாங்கியர், பகுதி, விகுதி பகுத்தறிந்து புருடனோடு—ஆன்மாவோடு—மற்றைய தத்துவங்கட்கு யாதொரு தொடர்பும் இல்லை எனத் தெளிவதே வீடு—விடுதலை—அடைவதற்குப் போதுமானது என்பர். வள்ளுவரோ தம் நூலில், தத்துவ உணர்ச்சியேயன்றி வீடடைதற்கு, பிறப்பொழிவதற்கு, 'எண்குணத்தான் தாளில் தலை வணங்கல்' (9) போன்ற சில செய்திகளும் வேண்டுமெனக் கூறுவர். அவர் கூறும் எண் குணத்தானும், தாள் தலை வணக்கமும் சாங்கியக் கொள்கைக்கு ஏலாச் செய்திகள். ஆதலின் வள்ளுவர் சாங்கியரும் ஆகார் எனக் கருதுவார் சிலர்.

உலோகாயதரா ?

வள்ளுவரை நாத்திகராக—உலோகாயதராகக் கொள்வாரும் உண்டு. நாத்திகர், பல பிறப்புக்கள் ஓருயிர்க்கே தொடர்ந்து வரும் எனக் கொள்ளுவதில்லை. வள்ளுவரோ, ஒருவனுக்கே தூக்கமும் விழிப்பும் மாறி மாறித் தொடர்ந்து வருவதுபோல ஓருயிர்க்கே பல பிறவிகள் தொடர்ந்து வரும் எனக் கருதுகின்றார்; கூறுகின்றார்;

*உறங்குவது போலும் சாக்காடு உறங்கி*
*விழிப்பது போலும் பிறப்பு* (339)

எனப் பாடுகின்றார். இதில் உறங்கி விழிப்பது என்னும் தொடரை நோக்குக. உறங்குவது போலும் சாக்காடு; விழிப்பது போலும் பிறப்பு என்றாலே போதும். இறப்புக்கும் பிறப்புக்கும் உவமைகள் பெறப்படும்; பொருள் விளங்கும். இடையே 'உறங்கி' என ஒரு சொல் காணப்படுகிறதே. ஏன்? ஒருவற்கே முந்திய உறக்கத்துக்கும் பிந்திய விழிப்புக்கும் இடையே உண்டாகும் தொடர்பினைக் காட்டுவதற்காக 'உறங்கி' எனக்கூறியுள்ளார். ஒருவனுக்கே மாறி மாறி உறக்கமும் விழிப்பும் தொடர்வது போல. ஓருயிர்க்கே

பல பிறப்பும் இறப்பும் தொடர்ந்து வரும் என்னும் கருத்துடைய உள்ளத்திலிருந்துதான், இத்தகைய பாட்டு எழக்கூடும். எனவே, 'உறங்கி விழிப்பது போலும் பிறப்பு' எனக் கூறிய வள்ளுவர். ஓருயிர்க்குப் பல பிறப்புண்டு எனும் கருத்துடையவராவர். இது நாத்திகத்துக்கு மாறுபாடு. பிறப்பு முடிந்தால்—உடல் இல்லையானால்—உயிரும் உணர்வும் நிலைபெறா என்பதும் நாத்திகக் கோட்பாடு. "பிறப்பு என்னும் பேதமை நீங்கச் சிறப்பு என்னும் செம்பொருள் காண்பது அறிவு'' என்னும் குறள், இக்கோட்பாட்டுக்கு மாறுதல் காண்க. பிறப்பு நீங்கியபின்னும்—உடலின்றியும்—உயிரறிவு, சிறப்பென்னும் செம்பொருளில் நிலைபெறக் கூடுமென்பதை ஓர்க. இங்ஙனம் கூறும் வள்ளுவர் நாத்திகராவரோ ?

மண்முதற் பூதங்களின் சேர்க்கையால் உடலுண்டாகும்போது, அதனிடை உணர்வும் உயிரும் உண்டாம்; ஆதலின் உடலே உயிர்க்குக் காரணமாவதன்றி உயிர்க்காக உடல் வருவதில்லை; உயிர் உடம்பெடுப்பதில்லை என்பதும் உலோகாயத நாத்திக தேகான்ம வாதக் கோட்பாடு. வள்ளுவர் இக்கருத்துடையவரானால் அவர் உள்ளத்தில்

*"உயிர்க்கு என்போடு (உடலோடு) இயைந்த தொடர்பு''* (73)

என்றொரு தொடர் அமைந்திராது; எழுந்திராது. உயிர்க்கு உடல் எனும் கருத்துடை உள்ளத்தில்தான, 'ஆருயிர்க்கு உடம்போடு இயைந்த தொடர்பு' எனும் தொடர்மொழிகள் தோனறும்; வெளி வரும். எனவே, உடம்பே உயிர்க்குக் காரணம் எனும் கொள்கையரல்லர் வள்ளுவர் இதனை "எல்லா உயிர்க்கும் பிறப்பு ஈனும் வித்து அவா'' (361) "மருளாஎ் மாணாப் பிறப்பு ஆம்'' (351) என்பனவும் வலியுறுத்தும். எனவே வள்ளுவர் உயிர்க்குப்பின் உடல் உண்டாகிறது; உடம்புண்டானபின் உயிர் தோன்றுவதில்லை எனுங் கருத்துடையவரெனத் தெளியலாம்.

நாத்திக உள்ளம் இம்மை மறுமை என்பவற்றை ஏற்காது; கூறாது; பாட்டில் அமைக்காது.

*இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்*
*கண்நிறை நீர்கொண் டனள்* (1315)

என்ற அமைப்பினை நோக்குக. 'நாம் இப்பிறப்பில் பிரியமாட்டோம்

என்று நான் சொன்னேன். அவள், வரும் பிறப்பில் பிரிவேற்படுமோ என்று கண் கலங்கினள்' எனக் காதல் தலைவன் வாய்வழி வரும் வள்ளுவர் பேச்சினை நோக்குக. இதுவா உலோகாயத உள்ளம்? நாத்திகப் பேச்சு? தேகான்மவாதியின் பாட்டு? போக்கு? கருதுக.

*இன்மை எனஒரு பாவி மறுமையும்*
*இம்மையும் இன்றி வரும்* [1042]

இதனையும் மேற்படி குறளோடு இணைத்து நோக்குக வள்ளுவரின் மறுமை உணர்ச்சி நன்கு வெளிப்படும்.

புண்ணியமும் பாவமும் உடம்பு அழிந்த பின்னும் உயிரைத் தொடரும் என்பது ஆத்திகப் பேச்சு. இது நாத்திகர்க்கேலாது. வள்ளுவரோ, அறம், இறந்த பின்பும் துணையாகும் என்னும் கருத்துடையவராகக் காணப்படுகின்றார். "அறம் செய்க. அது பொன்றுங்கால் (இறக்கும்போது) பொன்றாத் துணை" (36) என்கிறார் இது எதனைக் காட்டுகிறது? பூத வாதத்தையா? அன்று. உடம்பழியுங் காலத்தில் அழியாத் துணையாவது அறமே. பிற துணையாகா என்னும் வள்ளுவர் வாய்ச்சொல் உலோகாயதத்திற்கு அரண் செய்யாது; முரண்படும். உடம்புக்கு வேறான உயிரும், அவ்வுயிர் இறைவனடி சேர்தலும், பிறப்பென்னும் பேதைமை நீங்கிச் சிறப்பென்னும் செம்பொருள் காணலும் ஆகிய இவைகள் கூட, நாத்திகர்க்கு ஆகா. வள்ளுவரோ.

*குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே*
*உடம்போடு உயிரிடை நட்பு.* [338]

*பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்*
*இறைவனடி சேராதார்,* [10]

*பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்*
*செம்பொருள் காண்ப தறிவு:* [358]

எனக்கூறுவர். இங்ஙனமெல்லாம் கூறும் வள்ளுவரை நாத்திகரெனக் கொள்வதற்கும் ஆவதில்லை.

## வைணவரா ?

இன்னும் சிலர், வள்ளுவரை வைணவரெனக் காட்டுவர், இவருள் சிலர், தமிழ்நாட்டில் 'திருமால் சமயமாகிய வைணவ சமயம் மிக மிகத் தொன்று தொட்டு விளங்கிவரும் தனிப்பெரும் சமயம்'

எனத் தொடங்குவர்; இராமாநுசராற் சீர்திருத்தம் செய்யப்பெற்று விளங்குகின்ற இப்போதுள்ள வைணவ சமய முறைப்படி திருவள்ளுவர் இருந்தார் என்று கூறுதல் இயலாது; ஆயினும், சில முக்கியமான வைணவ சமயக் கொள்கைகள் திருவள்ளுவனார் கொள்கைகளாக இருந்தன என்று கொள்ளுதல் முரணாகாது' என்று முடிப்பர் ('தமிழில் வைணவம்' எனும் ஆராய்ச்சி நூல்). இக்கருத்து ஒரு வகையில் பொருத்தமாவது; அறிஞர் இணக்கத்துக்கு உட்படுவது எனக் கொள்ளலாம்.

மற்றொருவர், **'வள்ளுவர் வைணவ ஆழ்வார்களின் காலத்துக்குப் பிற்பட்டவர்'** (திராவிட வேத வைபவப் பிரகாசிகை. பக். 56) என்று தொடங்குவர்; மேலும் பற்பல கூறிச் செல்வர். வள்ளுவர் வைதிக வைணவரென முடிப்பர். இவ்வறிஞரின் பழம்போக்குகள் பலவும் ஆராய்ச்சி உலகின் இணக்கத்துக்கு உட்படுவன அல்ல; மறுப்புக்குட்படுதலும் கூடும். எங்ஙனமெனிற் கூறுவேன்

1907-இல் வெளிவந்த மேற்படி பிரகாசிகை நூலின் கருத்துக்களைத் திரட்டிச் சுருக்கிய ஆராய்ச்சிக் கட்டுரையொன்று 1954-இல் வெளிவந்துள்ளது. இக்கட்டுரை, 'திருவள்ளுவர் தம் தெய்வக் கொள்கை' என்னும் பெயரையும் பாரத ரத்ந ராஜாஜி அவர்களின் ஸ்ரீமுகத்தையும் பெற்றுத் திகழ்வது. அக்கட்டுரையின் முடிவுகள் பின்வருவன :—

*"உலகத்தைப் படைத்தார் பகவான் என்று தொடங்கி, அவனே நாராயணன் என்று அறுதியிட்டார் மநு. பின் தர்மங்கள் விரித்துப் பேசப்படுகின்றன அம் மநுதர்ம சாத்திரத்தில் என்பது கற்றோர் யாவரும் அறிவர். நம் பொய்யில் புலவர், 'ஆதிபகவன் முதற்றே உலகு' எனத் தொடங்கிப் பத்தாவது குறளால் அவ்வாதி பகவன் நாராயணனே ஆவான் என்று அறுதியிட்டு, பின் அவன் அருளிச் செய்த தர்மங்களைக் கூறிச் செல்லுதலையும் காண்க. பரம வைதிகரான இப் பெருந்தகையாரிருவரும் (மநுவும் வள்ளுவரும்) வேறு யாங்ஙனம் கூறுவர்?" ('திருவள்ளுவர் தம் தெய்வக் கொள்கை' விநோதன், பக். 53, 54).*

இங்ஙனம் கூறி, வள்ளுவர் மநுவைப் பின்பற்றிய பரம வைதிகர் எனக் காட்டுவதன்றி வைணவரெனவும் நாட்டுவர். அறத்துப்பாலில்,

# கப்பல் எங்கே போகிறது?

ஒரு நாட்டின் கரையோரத்தில் ஒரு கப்பல் நின்றது!

'இந்தக்கப்பல் "அடிவர்டு" (ADIVARD) நாட்டுக்குப் போகிறது ஏறுங்கள்' என்றான் கப்பல் தலைவன். 'அப்படி ஒரு நாடா? அஃது எங்கே இருக்கிறது? எப்படி இருக்கும்? நல்ல உணவு கிடைக்குமா? உடை கிடைக்குமா? உரிமையோடு இருக்கமுடியுமா? மக்கள் மகிழ்ச்சி யாக வாழ இயலுமா?'—என்று கேட்டனர், கரை கடக்கத் தெரியாத மக்கள்.

"அந்நாடு இக்கடலுக்கு அப்பால் இருக்கிறது! அங்கு நல்ல வள மிருக்கும்; நல்ல உணவு கிடைக்கும்; உடை கிடைக்கும்; வாழ்க்கை கிடைக்கும்; மக்கள் துன்பம் என்பதையே பார்க்காமல் இன்பத்தையே

---

(32-ஆம் பக்கத் தொடர்ச்சி)

"ஆதிபகவன் முதற்றே உலகு"

என்பது, ஸ்ரீமந் நாராயணனுடைய சர்வஜகத் காரணத்துவத்தை விளக்கும். பொருட்பாலில்,

"அடி அளந்தான் தாயதெல்லாம்"

என்பது, சர்வஜகத் ரக்ஷகத்துவத்தை விளக்கும் காமத்துப்பாலில்,

"தாமரைக்கண்ணன் உலகு" [1191]

என்பது, மோட்சப்ரதத்துவத்தை விளக்குமென்பர். அன்றி, லீலா விபூதி (610) நித்திய விபூதி (1291) எனும் உபய விபூதி நாயகன் (1) நாரணன் என்பதையும், திருக்குறளின் முப்பாலும் சேர்ந்து முடிவு செய்கிறதென்பது அவர்கள் கருத்து. 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்பதும்; 'ஒழுக்க நெறி' என்பதும் (6) முறையே கண்ணபிரானையும் பகவத் கீதையையும் குறிக்கும். ஆகவே, 'மநுநீதி'; பகவத் கீதை'களைப் பின்பற்றித் தமிழில் எழுதப்பட்ட வைதிக தர்ம சாத்திரமே திருக்குறள். இச்செய்திகளெல்லாம் — 'பெருமை ஒன்றுணரலாகாது' மநு பகவான் 'பேசிற்றே பேசிய' திருக்குறட் செய்தியெல்லாம் — ஆசற்றார் தங்கட்கல்லால் அறிபலாகா;' மாசற்றார் மனத்துள நாரணனடியார்க்கே புரியும் என்று இவர்கள் ஆழ்வாருடைய ஸ்ரீசூக்தியின்படியே வணங்கிபிருப்பர், கருதி உரைப்பர். இதன் விரிவை அழகிய மணவாள ராமாநுச தாசரவர்களியற்றிய 'திராவிட வேத வைபவப் பிரகாசிகை' என்ற நூலாலும், இந்நூலின் சாரமாகத் 'திருவள்ளுவர் தம் தெய்வக்கொள்கை' எனும் பெயரோடு 'விநோதன்'-பத்திரிகை — வெளியிட்ட கட்டுரைகளாலும் அறியலாம்.

[தொடரும்]

சுவைக்கலாம். ஆனால் அந்த நாட்டை நோக்கி இக்கப்பலைச் செலுத்திக்கொண்டு போவதற்குக் கன்னெய் வேண்டும்; கரி வேண்டும்! எனவே அவற்றை வாங்குவதற்காக நீங்கள் ஒரு சிறு கட்டணம் தரவேண்டும்'' என்றான் கப்பல் தலைவன்!

மக்கள் 'அடிவர்டு' நாட்டுக்குப்போகும் ஆசையால் கட்டணங்கள் கொடுத்தனர்; அன்பளிப்புகள் கொடுத்தனர்.

உடனே எல்லாவற்றையும் நிறைவு செய்துகொண்டு கப்பல் தன் கொடியுடன் கடலுக்குள் நீந்தியது. நாட்களாயின; கிழமைகள் ஆயின; மாதங்கள், ஆண்டுகள் பல சென்றன; இடையிடையே கப்பல் தலைவன் கப்பல் செலவுக்கென்று கேட்டு வாங்கிக்கொண்டே யிருந்தான்.

கப்பலில் இருந்தவர்கள் சோர்வுற்றனர்; ஊக்கம் குறைந்தனர்; முணுமுணுத்தனர்; முரண்பட்டனர்; வேறு கப்பல் ஒன்றில் ஏற மாட்டோமா என்று துடிதுடித்தனர்.

நெடுந் தொலைவுக்குப்பின்—நடுக்கடலில் சென்றுகொண்டிருக் பொழுது-கப்பல் தலைவன் அதில் உள்ளவர்களைப்பார்த்துச்சொன்னான்:

''என் அருமை மக்களே! 'அடிவர்டு' நாடு என்பதாக ஒரு நாடில்லை; எனவே அதற்கு இக்கப்பலும் போகமுடியாது. அங்குப் போகும் திட்டத்தையும் கைவிட்டு விட்டோம். இப்பொழுது இல்பு மெசா' [YLBMESSA] என்னும் நாட்டுக்குத்தான் நம்மால் போக முடியும்! எனவே பேசாமல் எங்களோடு வாருங்கள்'' — என்று கூறிக் கப்பலை வேறு திசையில் ஓட்டச்செய்தான். கப்பலில் உள்ள கொடியும் முன்புபோலவே பறந்துகொண்டிருந்தது!

'எங்களை ஏமாற்றிவிட்டான், இந்தக் கப்பல் தலைவன்' என்று மக்களில் பலர் கூக்குரலிட்டனர்.

'இல்லை! அவர் சொல்வதுதான் சரி! நீங்கள் பேசாமல் இந்தக் கப்பல் தலைவனின் பேச்சைக் கேளுங்கள்' என்று வேறு சிலர் எதிர்க் கூச்சலிட்டனர்.

ஏறியவர்களைப் பற்றியோ, ஏமாறியவர்களைப் பற்றியோ, அவர்களைக் கப்பலில் ஏற்றியபொழுது தான் கொடுத்த உறுதிமொழிகளைப் பற்றியோ கவலைப்படாமல் அந்தக் கப்பல் தலைவன் கப்பலைச் செலுத்திக்கொண்டிருந்தான்.

கப்பலில் உள்ளவர் பலர்க்கு, இந்தக்கப்பல் எப்பொழுதாகிலும் எந்த நாட்டிலாவது நம்மைக் கொண்டுபோய்ச் சேர்க்காதா என்னும் நம்பிக்கை இன்னும் இருக்கத்தான் செய்தது!

—இந்தக் கதை ஒருகாலத்தில் உண்மையாக நடந்த கதை என்று வரலாற்றாசிரியர்கள் சொல்கின்றார்கள். அந்தக் கப்பல் இந்த மாபெரும் கடலில் எங்கேனும் ஒரு பக்கம் இன்னும் சென்றுகொண்டு தான் இருக்கவேண்டும் என்றும் அவர்கள் கருதி ஆராய்ந்து வருகின்றார்கள்! அந்தக் கப்பல் எங்கே போகிறது?

—பெசின்.

# திருப்பனந்தாள் மடத்தின் ஆயிர உருபா பரிசு.

## (ஒரு முறையீடு)

*[தமிழ்ப் புலவர் தேர்தலில் முதல் எண் பெற்று மாநிலத்திலேயே முதல் மாணுக்கராக வருபவர்க்கு ஆயிர உருபா பரிசு வழங்குகிறது திருப்பனந்தாள் மடம். இதில் ஏன் வேறுபாடு? மடத்தார் கவனத்துக்கு இம் மாணவரின் முறையீடு முன்வைக்கப் பெறுகிறது. மடத்தின் பொறுப்பாளர்கள் இதனைக் கவனித்து ஆவன செய்யக் கேட்டுக் கொள்கின்றோம்.—ஆசிரியர்.]*

தென்மொழிப் பாவலர் ஐயா அவர்களுக்கு,

தலைதாழ்ந்த வணக்கம். தென்மொழி, தடை நீங்கி நடையிடுகின்றமை கண்டு தாழாப் பெருமகிழ்வு கொண்டேன். தங்களின் பிறழாப் பெருநடைக்கும் தென்மொழி வளர்ச்சிக்கும் என்போன்ற எளிய தொண்டர்களின் துணை என்றும் உண்டு.

தங்களின் 'பழைய இலக்கிய மலர்கள்' கடந்த இதழ்களை அணி செய்தமை கண்டு களிப்புக்கொண்டேன். தங்களின் இலக்கிய மலர்களனைத்தும் விரைவில் முழு நூல் வடிவம் பெற்று எங்கள் உணர்வுப் பசிக்குத் தீனியாகும் நாளை ஆவலுடன் எதிர்நோக்குகிறேன்.

தங்களின் கனல்வரிப் பாடல்களும் உணர்வுரைகளுந்தாம் என் உயர்நிலைப்பள்ளி வாழ்க்கையில்-பெரும் தமிழ்க்காதலை என் பால் ஏற்படுத்தி, என்னைத் தமிழ்க் கல்லூரிக்குள் அடியெடுத்து வைக்கச் செய்தன.

தாங்கள் ஊட்டிய தமிழுணர்வால், யான் 1975 மார்ச்சு, புலவர் இறுதிநிலைத் தேர்வில், முதல் வகுப்பில் மாநில முதன்மையாகத் தேறியுள்ளேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். திருவையாற்று அரசர்க் கல்லூரியில் யான் புலவர் கல்வி முடித்து, பின்னர் சைதை ஆசிரியர்க் கல்லூரியில் 1975 நவயபர் ஒன்றும் நாள் முதல் தமிழாசிரியப் பயிற்சி பெற்று வந்தேன் தமிழாசிரியப் பயிற்சி வகுப்பின்பொழுது நான் மாணவர் செயலாளகவும் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

புலவர் மாநில மூதன்மைத் தேர்ச்சிக்குத் 'திருப்பனந்தாள் மடத்தின் ஆயிரம் உருபா பரிசு' உண்டு என்பது தாங்கள்

அறிந்ததே. யான் அவ்வாண்டு மாநில முதன்மையாகத் தேறியிருந் தும் அவ்வாயிர உருபா பரிசு எனக்கு அளிக்கப்படவில்லை. மூன்ரும் தகுதி பெற்றுள்ள மாணவர் ஒருவருக்கே அப்பரிசு அளிக்கப்படு மென பல்கலைக் கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (என் மதிப் பெண் 385/600; பரிசளிக்கப்படும் மாணவரின் மதிப்பெண் 360/600 தகுதி (Rank) நிலையில் மூன்ருமிடம்.)

இது குறித்துப் பல்கலைக் கழகத் தேர்வுக் கட்டுப்படுத்துநரை எம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் - திரு. கோ இளங்கோவன், க.இ ; ப.இ. - மூலம் அணுகி உசாவியபோது, ‘மாநில முதன்மை கௌதமன் என்பதில் மாற்றம் இல்லை; தகுதிச் சான்றிதழ் (Grade Crtificate) வழி அஃது உறுதி செய்யப்பெற்றதே. ஆயினும், திருப்பனந்தாள் மடத்தின் ஆயிரம் உருபா பரிசு திருப்பனந்தாள் கல்லூரி மாணவர்க்கே வழங்கப் பெறும்’ எனக்கூறினர்.

மடப் பரிசு, மாநில முதன்மைப் பரிசு என்பதற்கும் நான் மாநில முதன்மைத் தேர்ச்சி என்பதற்கும் என்ன—பொருளென்றும் பொருத்தமென்றும்—இந்நிகழ்ச்சியிலிருந்து எனக்குப் புரியவில்லை. எவ்வாண்டும் இல்லாத அவ்வாண்டைய மாற்றத்திற்கு மட்டும் ஏதோ கரவான பின்னணி இருக்கும்போல் தெரிகிறது. தங்களின் பார்வைக்கு இச்செய்தி வரவேண்டியதன் இன்றியமையாமை நோக்கி தங்கள் முன்னிலைக்கு இதனைக் கொண்டு வந்தேன். தாங்கள் கருதி யதைச் செய்யவும்.

மடப்பரிசு தவிர்ந்தாலும், தனித்தமிழ்ப் பற்ருளன் ஒருவனின் ‘மாநில முதன்மைத் தேர்ச்சி’ தங்களை மகிழ்விக்குமென்று நம்பு கிறேன். தென்மொழி வழி இச்செய்தி ஏனைத் தமிழன்பர்களையும் மகிழ்விக்கட்டும்.

அன்பன்,

செந்தலை. ந. கௌதமன்.

*(பி.-கு.) 1972-ஆம் ஆண்டு சானூரப்பட்டி ‘உ.த.க. விழா’ வில் தங்கள் முன்னிலையில் யான் பட்டிமன்றத்தில் பேசித் தங்களால் பாராட்டப்பட்டது தங்கள் நினைவிற்குத் தப்பினுலும் 1975 மேத்திங்கள் உரத்தநாடு பாவேந்தர் பாட்டரங்கில் தங்கள் தலைமையில் யான் பாடியது தங்களுக்கு நினைவிருக்குமென்று நம்புகிறேன்.*

# 'நேற்றும் இன்றும்'

—'பழங்குடி'

திரு. மா. சண்முக சுப்பிரம்மணியம் என்பார் மாநில (சட்டத் துறை) ஆட்சிமொழி ஆணையத்தின் தலைவராக 1966 முதல் இருந் தவர். தற்போது அதன் தலைவராகப் பொறுப்பேற்றிருப்பவர். ஒய்வு பெற்ற உயர் அறமன்ற நடுவர் திரு. மகராசன் அவர்கள் அவர், முந்தைய தலைவரின் கீழ் சட்டமொழி பெயர்ப்புப்பணி 'மெதுவாக' நடந்து வந்ததாகக் குறைகூறி இருந்தார். தாம் அப்பணியைப் பதினெட்டு மொழிபெயர்ப்பாளர்களின் துணையோடு ஈராண்டுகளில் முடிப்பதாகக் கூறியுள்ளார். திரு மகராசனவர்களுக்கு விடையாக 'குமுதம்' கிழமை இதழில் திரு. சண்முக சுப்பிரமணியம் கீழ்க்காணு மாறு விடையளித்தார்:

'மொழிபெயர்ப்பு என்பது ஒரு கலை; அதிலும் சட்டத்தை மொழிபெயர்ப்பது நுட்பமான ஒரு கலை. ஆங்கிலச் சட்டங்களைத் தமிழில் மொழிபெயர்ப்பதற்கு முதலாவதாக ஆழ்ந்த சட்ட அறிவு வேண்டும். ஆங்கிலம் தமிழ் இரண்டிலும் போதிய புலமைவேண்டும்'.

—இப்படி, வெள்ளையனை வெளியேற்றிவிட்டு அவனுடைய மொழியில் இருக்கும் சட்டங்களை வெளியேற்ற இன்னும் நம்முடைய நாட்டுச் சட்டத்துறை அறிஞர்கள் காலத்தைத் தள்ளிப்போட்டுக் கொண்டே செல்கின்றனர். மேற் குறிப்பிட்ட ஈரறிஞர்களும் சட் டத்தை நன்கு பயின்றவர்கள். அஃதொப்பவே, தமிழையும் நன்கு அறிந்தவர்கள். மொழிபெயர்ப்புப் பணிக்கென்றே அரசால் அமர்த் தப்பெற்றவர்கள், மேலும் தங்கள் பணிக்கென வேண்டிய ஆள் துணை யும், நூல் துணையும், வருவாய்த் துணையும் மிக்கவர்கள். ஆனால் இப்படியெல்லாம் எவ்வகை ஏந்துகளும் இல்லாமல், தம்முடைய பணியையும் கவனித்துக்கொண்டு முதன்முதலாக ஏறத்தாழ நூற் றிருபது ஆண்டுகளுக்குமுன், தன்னந்தனியராய் இம்மொழிபெயர்ப் புப்பணியில், கைம்மாறு கருதாது ஈடுபட்டார் ஓரறிஞர் எனின் வியப்பாக இல்லையா? அதுமட்டுமன்று; அன்றைய 'வழக்குமன்ற' நடைமுறைகளையும், நடுவர்களையும் கண்டு அவர் எவ்வளவு மனங் கொதித்தார் என்பதை அறிந்தால் இன்றைய தமிழறிஞர் உலகே நாணும்! ஆம். அப்படிப்பட்ட அறிஞர்தாம் 'மாயூரம்' என்னும் மயிலாடுதுறை நடுவர் வேதநாயகம், கடந்த அக்தோபர் '76-இல்

அன்னாரின் நூற்று ஐம்பதாம் பிறந்த நாள் வந்தது. அதை நினைவு கூர்ந்தேனும் அவருடைய கருத்து மலர்களை நுகர்வோம்:

வேளாண் குளத்தூரிலே பிறந்த வேதநாயகர் தம் இருபத்திரண்டாம் அகவையில் (1848-இல்) வழக்கு மன்றத்தில் ஆவணக் காப்பாளரானார். 1850-இல் திருச்சிராப்பள்ளி மாவட்ட வழக்கு மன்றத்தில் மொழிபெயர்ப்பாளராக அமர்ந்தார். 1805-ஆம் ஆண்டு முதல் 1861-ஆம் ஆண்டு வரை ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த வழக்கு மன்ற முடிவுகளை அரிதின் ஒருங்கு திரட்டி 1862-ஆம் ஆண்டில் 'சித்தாந்த சங்கிரகம்' என்னும் நூலாக வெளியிட்டார். 1862-1863-ஆம் ஆண்டு உயர் அறமன்றத் தீர்ப்புகளை 1864-ஆம் ஆண்டில் தமிழில் வெளியிட்டார். இவைதாம் சட்ட நுணுக்கங்களை பற்றிய முதல் தமிழ் நூல்கள். கீழே உள்ளவை அவ்வறிஞரின் மணிமொழிகளில் சில.

'தமிழக வழக்கு மன்றங்களில் தமிழ் வழக்கறிஞர்கள், தமிழில் வழக்குரைக்காமல் ஆங்கிலத்தில் உரைக்கின்றனரே! நாட்டு மொழியும் தமிழ்; வழக்கு மன்றத்தில் வழங்குகின்ற மொழியும் தமிழ்; நடுவரும் தமிழர். வழக்காடியும், எதிர்வழக்காடியும் தமிழர்; வழக்கறிஞரும் தமிழர்—எல்லாந் தமிழ் மயமாயிருக்க, யாருக்குப் பயனளிக்க ஆங்கிலத்தில் உரைக்கிறார்களோ தெரியவில்லை. ஆங்கில அதிகாரிகள்கூட நாட்டுமொழித் தேர்வில் தேறவேண்டும் என்ற சட்டம் ஏற்பட்டுள்ளது. அப்படியிருக்க தமிழ் வழக்கறிஞர்கள் ஆங்கிலத்தில்—அயல் மொழியில் வழக்காடுவது முறைக்கேடு அல்லவா? தமிழ் நன்றாகப் பேச வராதென மதிப்புடன் சொல்லிக்கொள்கிறார்கள். இதனினும் இழிவு வேறொன்றில்லை'

'சட்ட நூல்கள் ஆங்கிலத்திலே அமைந்து கிடப்பதாலும் சட்ட நுணுக்கங்களுக்குரிய சரியான சொற்கள் தமிழிலே இல்லாமையாலும் தாங்கள் ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதாகச் சிலர் சொல்கிறார்கள். அஃது அறியாமையே; உண்மையன்று. தமிழ் நூற்களைத் தக்கபடி ஆய்ந்தால் சொற்கள் அகப்படாமல் போகா. இரண்டொரு குழூக்குறிகளுக்குத் தமிழ்ச்சொற்கள் இல்லை என்றால், அவற்றை மட்டும் ஆங்கிலத்தில் வழங்கினால் யார் சினந்துகொள்ளப்போகிறார்கள்.'

'வழக்குரைஞர்கள் ஆங்கிலத்தில் வழக்குரைப்பது முறையன்றென சில தமிழ் நடுவர்களுக்குத் தெரிந்திருந்தும். அதைக் கண்டித்தல், தங்களுக்கு ஆங்கிலந் தெரியாதென்று மற்றவர்கள் நினைப்பார்களே என்று ஆங்கில உரைக்கு இடங்கொடுக்கிறார்கள்; நடவடிக்கைகளை அவர்கள் ஆங்கிலத்திலே நடத்துகிறார்கள். சில சமையங்களில் வழக்குரைஞரும், நடுவரும் ஆங்கிலத்தை நன்றாகப் படியாதவர்களானால், ஒருவர் சொல்வது ஒருவருக்குத் தெரியாமல் சண்டையிட்டு, நொந்து கொள்கின்றனர். வழக்கு மன்றங்கள் நாடகசாலையாகத் தோன்றுகின்றன'.

'ஒவ்வொரு வழக்கிலும் உண்மையைக் கண்டுபிடித்து நயன்மை வழங்குவது வழக்கு மன்றின் கடமை. தாய்மொழியிலே வழக்கு மன்ற நடவடிக்கைகள் நடந்தால் மட்டும் உண்மை வெளியாகுமேயன்றி, மக்களுக்குப் புரியாத மொழியிலே நடந்தால், எப்படி உண்மை வெளியாகும்? தமிழ் நடுவர்கள் எல்லா நடவடிக்கைகளையும் ஆங்கிலத்திலே நடத்தும்படி சட்டம் இல்லை. தீர்ப்பை மட்டும் ஆங்கிலத்திலே எழுதலாம். அப்படியிருக்க தமிழ் நடுவர்களும், வழக்குரைஞர்களும் தாங்கள் பயின்ற ஆங்கிலம் மறந்துபோகாமலிருக்க, அதை வழங்கி, அறமன்றச் சட்டமுறைகளைக் குளறுபடி செய்வது ஒழுங்கா? வினவங்கள், தீர்ப்புகள், தண்டனைகள், உத்தரவுகள் ஆகியவற்றை அனைவரும் அறிவது நல்லதல்லவா? வழக்குகளைக் கேட்டு, அதனால், அறிவடைவதற்காக வழக்குமன்ற வாயில்களில் மக்கள் கூடுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு விளங்காத மொழியிலே வழக்கு நடப்பதால், குருடன் கூத்துப் பார்க்கப்போன கதையாய் முடிகிறது. சுருங்கச் சொன்னால், தமிழ் நடுவர் முன் ஆங்கிலத்தில் வழக்குரைக்கின்ற தமிழ் வழக்குரைஞர் தமிழ் மொழியையும், தமிழ் மக்களையும் அவமதிக்கிறார்கள்'.

## செய்தி தெரியுமா?

○ வேதங்களும் இந்திய அரசும்:

வேதங்களைப் பரப்பும் நோக்கத்துடன், இந்திய அரசு மிக அக்கரையுடன் சில திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. அவற்றுள் ஒன்று, தம் இரு குழந்தைகளுக்கோ, அல்லது தம் உறவினரின் இரண்டு குழந்தைகளுக்கோ, வேதங்களைக் கற்பிக்கும் வேத ஆசிரியர் ஒருவர்க்கு மாதம் உரு. 500, அவர் வாழ்நாள் வரை கொடுக்கப்பெறும். அவ்வாறு வேதங்களைப் பயின்றுவரும் மாணவர் ஒவ்வொருவருக்கும் உரு: 100 அந்த வேதப்பயிற்சி முடியும் வரை தரப்பெறும். பின் அவர்களுக்கும் மாதம் உரு: 500 வாழ்நாள் வரை கொடுக்கப்பெறும். இவ்வகையில் நூற்றுக்கணக்கான வேதம் படிப்பவர்களை உருவாக்குவது இந்திய அரசின் நோக்கம் என்று இந்திய அரசின் வேதப் பரப்புத் திட்டத்தின் சமசுக்கிருதக் கருத்தாளர் பர். சி. ஆர், சுவாமிநாதன். அண்மையில் செய்ப்பூரில் நடந்த அனைத்திந்திய வேத மாநாட்டில் கூறினர்,

# செய்திகள்.

**1. இலவயத் திருக்குறள் வகுப்புகள் — முதல் வகுப்புத் தொடக்க நிகழ்ச்சி — கோவை:**

கோவை, குடிமைப் பயிற்சி இயக்கமாகத் தொண்டாற்றும் நலவிஜ ஆயத்தின் சார்பில், வடகோவை இருப்புப்பாதை அருகில் உள்ள அரங்க மருத்துவமனையின் முன்புறம் அமைந்த கட்டடத்தில், கடந்த சுறவம் உச (6—2—77) ஞாயிறு அன்று இலவயத் திருககுறள் வகுப்பின் முதல் நாள் நிகழ்ச்சி நடைபெற்றது. அக்கால் கடவுள் வாழ்த்து அதிகாரத்தை திருக்குறள் வகுப்பாசிரியர் புலவர் திரு. ந. சுந்தரராசனுர் அவர்கள், இசையொடு பாடி நடத்திக் காட்டினர். பண்டுவர் அரங்கனர், புலவர். மருதவாணன், திரு. இறையனர், திரு. நித்தலினபனர் ஆகியோர் நல்லுரைக்குப் பின், பாவலரேறு பெருஞ்சித்திரனர் அவர்கள் திருக்குறள் சிறப்புரையாற்றினர். ஓராண்டுச் சிறைக்குப்பின் பாவலரேறு அவர்கள் கலந்துகொண்ட முதல் நிகழ்ச்சி இதுவேயாகலின், உள்ளூரினின்றும், அண்டை அயல் ஊர்களினின்றும் அறிஞர்களும், அன்பர்களும் திரளாக வந்து கலந்து கொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்,

**2. திருவள்ளுவர் திருவிழா—புதுவை:**

கடந்த கும்பத்திங்கள் (27—2—77) ஞாயிறு, புதுவை, கதிர் காமம் திருவள்ளுவர் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்த திருவள்ளுவர் விழா தமிழ்த்தகை புலவர். தமிழவேள் அவர்களின் தலைமையில் சிறப்பொடு நடந்தது. அக்கால் திரு. ந மு தமிழ்மணி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, திரு. தமிழேந்தி, வரக்குரைஞர் ந. வீரப்பன், புலவர். திரு. அரிமதி தென்னகன், திரு. அரிமா வளவன். சிங்கைப் பாவலர், திரு முல்லைவாணன், திருக்குறள் பெருமாள் ஆகியோர் நல்லுரையாற்றினர். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனர் அவர்கள் நீண்ட அரியதொரு சிறப்புரையாற்றினர் கூட்டத்திற்குப் பேராசிரியர்களும், தமிழறிஞர்களும், தென்மொழியன்பர்களும், புதுவை வட்டாரப் பொதுமக்களும் தாய்மார்களும் ஏராளமாக வந்திருந்து, விழாவைச் சிறப்பித்தனர்.

**3. இலக்கியச் சிறப்புக் கூட்டம் — வெங்காலூர்:**

கடந்த 6—3—77 ஞாயிறு மாலை, வெங்காலூர் (பெங்களுர்) தமிழன்பர்கள் குழு கூட்டிய இலக்கியச் சிறப்புக்கூட்டம், பெங்களூர்த் தமிழ்ச் சங்கக் கட்டடத்தில் இனிதே நடைபெற்றது. கூட்டத்திற்குச் சிங்கைப் பாவலர் திரு. முல்லைவாணன் அவர்கள் தலைமை தாங்கினர் மலேசியப் பாவலரும், திருப்பம் இதழாசிரியரும் ஆகிய ஐ. உலகநாதன் அவர்களின் உரைக்குப்பின் பாவலரேறு. பெருஞ்சித்திரனர் அவர்கள் மிகச்சிறந்த ஒரு சிறப்புரையாற்றினர். கூட்டத்தில் பேராசிரியர் பலரும், பொதுமக்களும், தமிழன்பர்களும் நிறைந்தினிது கூடியிருந்து மகிழ்ந்தனர். கூட்டமுடிவில் தென்மொழி வளர்ச்சிக்காகப் பெங்களூர் இந்தியத் தொலைபேசித் தொழிலக நண்பர்கள் சார்பாக, திருவாளர்கள். து. இளமாறன், வ. இளமாறன் அவர்கள் திரட்டிய உரு. 240 அன்பளிப்பாக ஆசிரியர் அவர்களிடம் அளிக்கப் பெற்றது. ஆசிரியர் அதனை நன்றியுடன் பெற்று அன்பர்கள்தம் அறமுயற்சியைப் பெரிதும் பாராட்டினர்.

வேண்டும். உங்களின் தமிழ்ப்பணித் தொடர்பாக வேண்டுமானால் 'பேரவையிலும்', 'வழக்காடு மன்றத்திலும்', 'பட்டிமன்றத்திலும்', 'பாட்டரங்கத்திலும்' ஏற்பாடு செய்யலாம். இது மிகத்தேவையானது. ஆனால் கொப்பளித்துக் கொண்டிருக்கும் உங்களின் அறிவார்ந்த செஞ்சொல் திறனும், அஃகியகன்ற அறிவும், கிடைத்தற்கரிய அறிவுப்பெட்டகமும் இன்னும் என்னால் செரிக்க இயலாத் திறனும், இளைஞர்கள் நெஞ்சிலும் மதிமயங்கி நிலை தவறிக்கிடக்கும் பொதுமக்களிடையிலும் உலா வரவேண்டும். இதற்கிடையில் தென்மொழி வளர்ச்சியில் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டியிருக்கிறது. இவ்வியக்கம் ஒரு கட்சியையும் விஞ்சியது. இந்நிலையில் நேற்றுத் தொடங்கிய வெறியூட்டும் கட்சிகளுக்குக் கூட கோடி இலக்கம் என்று தொகை இருக்கின்றபோது—தென்மொழி இழப்பிலும் கடனிலும் இருக்கின்றது என்கின்றபோது—என் நெஞ்செல்லாம் எரிகின்றதய்யா, எரிகின்றது!

—கி. பெருமாள், கோ. மலையாண்டிப்பட்டணம், கோவை.

**0 : 516 :** அறிஞர் பெரும! என் அகங்கனிந்த கைகூப்பு. அன்னைத் தமிழை மீட்டுக் காக்கும் அரும்பணியில் தலைமை தாங்கி வரும் தாங்கள் சிறை சென்றதும், சிறை மீண்டதும் ஆகிய அனைத்தும் அறிவேன். இவ்விடம் தம்பி அரசிறைவன் வழித் தென்மொழிக்கு இயன்ற உதவியைச் செய்து வந்தேன். இனியும் செய்வேன். என்றும் செய்யக் காத்துள்ளேன்.

ஓராண்டுச் சிறை சென்று மீண்ட தங்களை நேரில் வந்து காண இயலவில்லையாயினும் என் உள்ளம் தென்மொழியை நிழல் போல் ஒட்டியே நிற்கின்றது. ஆசிரியவுரை எழுத இயலாது இருந்த அரிமா கூண்டைவிட்டு வெளிவந்து விட்டதால் தாயைப் பிரிந்த சேய்போல் தங்களின் வளங்கெழுமிய ஆசிரியவுரைக்கு ஏக்கற்றிருந்து எங்களைத் தங்களின் அறிவுச் செல்வத்தை வழங்கி வாழ்வளிக்குமாறு வேண்டுகிறேன். தமிழக வானைக் கௌவி நிற்கும் காரிருள் நீக்கும் பணியில் தங்களைப்போன்ற பேரறிஞர்கள் காட்டும் பாதையில் செல்லக் காத்துள்ளோம். வழி காட்டுங்கள்.

தாங்கள் நெடிய வாணாளும், பன்னலமும் பெற்று வாழவும், தங்கள் தொண்டால் தமிழக வானில் விரைவில் விடிவெள்ளி பூக்கவும் திருவருள் புரியுமாறு எல்லாம்வல்ல இறைப்பேராற்றலை எண்ணி வழுத்துகிறேன். உண்மையுள்ள தமிழ்த்தொண்டன், தென்மொழி

அன்பன்,—க. அறவாழி, (க. சந்திரசேகரன்) தஞ்சை

**0 : 517 :** அன்பும் அறிவும் நிறைந்த அய்யா அவர்கட்கு, தங்கள் சொற்பொழிவை நேற்றிரா கதிர்காமத்தில் கேட்டது முதல், என் செவிப்புலன் கடந்த ஆழ்மனம், அப்பொழிவில் தொடுமணற்கேணியின் ஊற்றெடுத்த தங்கள் எண்ணச் சுடர்களை அசையிட்டவாறே உள்ளது. ஆரவாரமான, உண்மைக்குப் புறம்பான, மற்றவர்கள் பால் மாந்த நேயமில்லாத உரைகளுக்கிடையில், அமைதியான, வினையாற்றல் மிக்க, ஆற்றொழுக்கான, அருந்தமிழாற்றல் நிறைந்த, அன்பில் மிக்க, கேட்கும் உள்ளங்களிலெல்லாம் பசுமரத்தாணிபோல் தைத்தூடுருவுகின்ற தங்கள் பொழிவு எனக்கு நந்தமிழகத்தின் எதிர்காலம் குறித்த பெரும் நம்பிக்கையை நல்கியுள்ளது. ஓராண்டுச்சிறைக்குப்பின் ஒருவர் பேசும் பேச்சா அது? இல்லையில்லை. தமிழரனைவர்க்கும்தான் உண்மையில் ஓராண்டுச் சிறை—உங்கள்

உறவிலிருந்து, உங்கள் காட்சியிலிருந்து தமிழர்கள்தாம் பிரித்துச் சிறையிடப் பெற்றனர்.

''கதவு திறந்தது'' என்னும் பாவுடன் வெளிவந்துள்ள 'தென்மொழி'யும், 'தமிழ்ச்சிட்டு'ம், 'தன்னுணர்வு' போலும் புதிய தங்கள் பொத்தகங்களும், பழைய...... ஆயினும் வலிவுற்ற...... அதே பொலிவுடன் தாங்களும், பாவலர் பாரதிதாசனின் பாடலை மெய்ப்பிக்கின்றீர்கள்.

''பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு
திறக்கப்பட்டது! சிறுத்தையே வெளியில்வா!
எலிஎன உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலிஎனச் செயல்செய்யப் புறப்படு வெளியில்!''

பாரதிதாசன் தமிழிளைஞனைப் பார்த்து மொழிந்த சொற்கள் தங்களின் சிறைவீடு பொறுத்தமட்டில் உண்மையான குறிப்புகளாகி விட்டன. முழுத்தன்னுணர்வோடும் தன்னடக்கத்துடனும், தாங்கள் மிகப் பயனுள்ள வகையில், திருக்குறள் தமிழர் வாழ்க்கை நூல் எனப் பொழிந்த முத்துகள் ஒன்பான் மணிகளையும் விஞ்சித் திகழ்வன. தங்கள் கைக் கருவிகளான தென்மொழியும், தமிழ்ச்சிட்டும் மேலும் பல்லாற்றானும் வளர வாழ்த்துவதுடன், அவற்றின் வளர்ச்சிக்கான உருப்படியான வினைப்பாடுகளையும் செய்வேன் என மொழியும், உங்கள் அன்பன்,

—அ. பசுபதி, தமிழ்த் துணைப்பேராசிரியர், புதுவை.

**0 : 518 :** தண்டமிழின் தனித்தலைவ, வணக்கம் பல. தங்களைச் சிறை புகுமுன் காணவந்தேன். இயலவில்லை! காரணம், தாங்கள் வெளியில் அலுவலாகச் சென்று இருந்தீர்கள். எவ்வாறேனும் தங்களைவிட ''தென்மொழி'' மீதே அன்பு அதிகமாக உள்ளது. சென்னையில் தென்மொழியன்பர்களே கிடையாதா? ஏன், ஒரு மடல்கூட, சென்னை நகரிலிருந்து, எழுதவில்லையா? அல்லது புறக்கணிக்கப்பட்டதா? அறியேன். (அண்மையில் வந்த தென்மொழியில் சென்னை அன்பர்களின் ஒரு மடல்கூட இடம் பெறவில்லை என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.) தனித் தமிழ்த்தந்தை மறைமலையடிகளார் வாழ்ந்த சென்னையில், மிகுதியான தமிழ் அன்பர்கள் இல்லையா? வருந்தத்தக்கதே! தங்களின் ஆசிரிய உரை இல்லாத தென்மொழி, எலும்பில்லாத மாந்தனைப்போல, கலங்கரை விளக்கு இல்லாத கடற்கரைபோல, உண்மையிலேயே ஒரு முழு மன நிறைவு அளிக்காமல் இருந்தது. ஆதலால் தாங்களின் சீரிய ஆசிரிய உரையைப் படிக்க, மிக்க ஆவலாய் இருந்தேன். அடிகளாரை மிஞ்சும நடை தாங்கள் வரைந்தபோதிலும், பாரதிதாசன் அவர்கள் கூறியது போல் 'எளிய தமிழ்நடையே—எல்லோரையும் கவரும்—இக்காலத்திற்கு ஏற்றது' எனக் கூறியமை தாங்கள் சிந்திக்கத் தக்கது. தென்மொழிக்கு எல்லாவகையினும் உதவ, என் நெஞ்சின் அலைகளாக மோதிக்கொண்டே இருக்கின்றன... வலிவான எண்ணங்களே செயலாகின்றன.

அன்பன் —உதியஞ்சேரன், சென்னை-33.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. (தமிழகம்)